24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 65 தை 17ஆம் நாள் வியாழக்கிழமை 31 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050

ஞானசாரதேரரை அரச தலைவர் விடுவித்தால் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்க ஒருங்கிணைப்பாளர் வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 31

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சுதந்திர தினத்தை முன்னிட்டு ஞானசாரதேரரை விடுவித்தால் அரசியல் கைதிகளையும் அவர் விடுவிக்க வேண்டும் என்று தெரிவித்தார் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப் பாளர் அருட்தந்தை சக்திவேல்.

கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பொதுமன் னிப்பு வழங்கும் விடயம் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரை யாடிய போது, சுதந்திர தினத்தன்று அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் என அவர் உறுதியளித்தார் என்று பொதுபலசேன தெரி வித்துள்ளது. இது குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஞானசார தேரர் என்பவர் நாட்டின்

» 04

காணாமல் ஆக்கப்பட்டோரினது உறவுகள் நேற்றுக் கவனவீர்ப்பு

வவுனியா, ஜன. 31

காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலையைத் தெரியப்படுத்த வேண் டும் என்று வலியுறுத்தியும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள

» 24

யாழ்ப்பாணத்தில் கைப்பற்றப்பட்ட எதனோல் நேற்று அழிக்கப்பட்டது

கிளிநொச்சி, ஜன. 31

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் கைப்பற்றப்பட்ட எத னோல் என்னும் போதைப் பொருள் கிளிநொச்சி நீதி மன்றத்தின் கட்டளைக்கு அமைவாக நேற்று அழிக் கப்பட்டது.

» 04

தமிழர் முற்போக்குக் கூட்டணி அரசிலிருந்து விலக வேண்டும்

இப்படிச் சொல்கிறார் கெஹலிய

கொழும்பு, ஜன. 31

பெருந்தோட்டத் தொழிலா ளர்களுடைய சம்பள அதிக ரிப்பு விடயத்தில் அரசு மக் களை ஏமாற்றியுள்ளது. எனவே இத்தகைய அரசில் இருந்து தமிழர் முற்போக் குக் கூட்டணி

» 04

சிறுபான்மையின வாக்குகள் கோத்தபாயவுக்குக் கிட்டாது

ராமநாயக்க இப்படிச் சவால்

கொழும்பு, ஜனவரி 31

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தன்னுடைய வாழ்நாளில் சிறு பான்மை மக்களின் வாக்குகளை ஒருபோதும் பெற் றுக்கொள்ள மாட்டார் என்று தெரிவித்தார் நெடுஞ் சாலை வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க.

» 04

போதைப்பொருள் கடத்தல் தகவல் வழங்கிய விவகாரம்:

பாடசாலைக்குள் புகுந்து அச்சுறுத்தல் மெய்வன்மைப் போட்டிகள் நிறுத்தம்

கிளிநொச்சி, ஜன. 31

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகவலைப் பொலிஸாருக்கு வழங்கிய மாணவன் அச்சுறுத்தப் பட்டு, தாக்கப்பட்டுள்ள நிலை யில், மாணவன் கல்வி கற்ற பாடசாலைக்குள் இனந் தெரியாத குழு நேற்றுமுன் தினம் இரவு புகுந்து ஆசிரி யர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது. இதனைய டுத்து பாடசாலையில் நேற்று நடைபெறவிருந்த மெய் வன்மைப் போட்டியும் நிறுத் தப்பட்டுள்ளது.

» 04

see more news in
newuthayan.com

ஐ.நாவில் இலங்கைக்கு

கால அவகாசம் வழங்கப்படுவதற்கு எதிராக மக்கள் எழுச்சிப் போராட்டம்

ரெலோ பொதுக்குழுவுக்கு தீர்மானம் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அர சுக்கு இனியும் கால அவகா சம் வழங்கப்படக் கூடாது. இலங்கை அரசு மீதான அழுத்தம் அதிகரிக்கப்பட வேண்டும். இதனை வலியு றுத்தி மக்கள் எழுச்சிப் போராட்டத்தை முன்னெ டுக்கவேண்டும். இதற்காக வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளில் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் ஒரே நிலைப் பாட்டில் உள்ள அனைவரு டனும் பேச்சு நடத்தவேண் டும்.

» 04

புங்குடுதீவு வித்தியா படுகொலை வழக்கு

சந்தேகநபரை விடுவித்தமை தொடர்பான விசாரணையைத் துரிதப்படுத்த உத்தரவு!

யாழ்ப்பாணம், ஜன. 31

புங்குடுதீவு வித்தியா படு கொலை வழக்கில் முதன் மைச் சந்தேகநபரை விடு வித்தமை தொடர்பாக முன் னாள் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு எதிரான வழக்கில் விசாரணைகளை விரைவு படுத்துமாறு குற்றப்புல னாய்வுப் பிரிவினருக்கு ஊர் காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தர

» 04

தோட்டத் தொழிலாளர் ஒப்பந்த விவகாரம் ரணிலை சந்திக்கிறது தமிழர் முன்னணி!

கொழும்பு, ஜன. 31

தோட்டத் தொழிலாளர்கள் விவகாரத்தில் அரசு மக் களை ஏமாற்றியுள்ளது என்று தெரிவித்து விமர்சித்து வரும் தமிழர்

» 04

சட்டவிரோத முறையில் பணம் அறவிட்டால் அதிபர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 31

வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்களுக்கு மேலதிக மாக சட்டவிரோதமான முறை யில் பணத்தை அறவிடும் அதிபர்களுக்கு எதிராகக் கடு மையான நடவடிக்கை எடுக் கப்படும் என்று எச்சரித்தார் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்.

இது தொடர்பில் அமைச்ச ரின் ஊடகப் பிரிவு

» 04

சிறுமியைக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில்

கைதான காத்தான்குடி நபரை தப்பிக்கவிட்டனர் பொலிஸார்!

யாழ்ப்பாணம், ஜன. 31

சிறுமி ஒருவரைக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில், காத்தான்குடியைச் சொந்த இடமாகக் கொண்ட இளை ஞனை மடக்கிப் பிடித்து முறையான கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம் மக்கள் ஒப்படைத்தனர். அவர் மருத்துவமனையில் பொலிஸ் பாதுகாப்பிலிருந்த போது தப்பிச் சென்றுள் ளார். பொலிஸார் வேண்டு மென்றே அவரைத் தப் பிக்கவிட்டனர்

» 04

தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கைதி தப்பியோட்டம்

» 24

கிளைமோர் தாக்குதலில் இறந்தோருக்கு அஞ்சலி

மன்னார், ஜன. 31

தட்சணாமருதமடுப் பகுதியில் கடந்த 2008ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

விடத்தல் தீவில் இருந்து மடுக்கோவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து மீது கடந்த 2008ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பலர் கொல்லப்பட்டனர். அவர்களின் உறவினராலேயே இந்த அஞ்சலி நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது. தாக்குதல் மடுவுக்கும், தட்சணாமருதமடுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் நடைபெற்றது என்று இறந்தோரின் உறவினர் தெரிவித்தனர். (ம-213)



திருகோணமலைத் துறைமுகம் அமெரிக்காவுக்கு வழங்கப்படா

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31

திருகோணமலை துறைமுகத்தை உள்நாட்டுத் தேவைக்காகப் பயன்படுத்தவே அரசு முயற்சிக்கிறது. அமெரிக்காவுக்கு அந்தத் துறைமுகம் வழங்கப்படும் என்று வெளிவரும் தகவல்களில் உண்மைத்தன்மை ஏதுமில்லை. அமெரிக்காவுடன் நட்புறவைப் பலப்படுத்துவதற்காக ஏனைய நாடுகளைப் பகைத்துக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன.

இது தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சியினர் ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு புரளியை மக்கள் மத்தியில் பரப்பிக்கொண்டுதான் உள்ளனர். இப்போது அமெரிக்க - இலங்கை உடன்படிக்கை என்று ஏதேதோ தெரிவித்து நாட்டைக் குழப்பி வருகின்றனர்.

இலங்கை அரசு பல்வேறு நாடுகளுடன் பல பாதுகாப்பு உடன்படிக்கைகளைச் செய்துகொண்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு, கடல் எல்லை பாதுகாப்பு மற்றும் கூட்டு உடன்படிக்கை குறித்து முக்கிய நாடுகள் எம்முடன் உடன்படிக்கைகளை செய்துள்ளமை புதிய விடயம் அல்ல. ஆனால் நாட்டில் இராணுவ முகாம் அமைப்பது குறித்து அமெரிக்காவுடன் நாம் எந்தவொரு உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை. அவ்வாறு இன்னொரு நாடு எமது நாட்டுக்குள் வந்து அவர்களின் முகாமொன்றை அமைத்துக்கொள்ள இடமளிக்க வேண்டிய எந்தவொரு தேவையும் எமக்கு இல்லை. அவ்வாறு முகாமமைத்து பன்னாட்டுப் பிரச்சினைகளை நாம் அதிகரிக்க இடமளிக்க மாட்டோம். அமெரிக்காவை நட்பில் வைத்துக் கொள்ள ஏனைய நாடுகளைப் பகைத்துகொள்ள முடியாது. இவ்வாறு செயற்பட்டால் ஏனைய நாடுகளைப் பகைத்துக்கொள்ள நேரிடும்.

இவ்வாறான உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சி கூறுகின்றது. அது குறித்து அவர்கள் எம்மிடம் கேள்வி எழுப்புவதை விடவும் அவர்கள் பாதுகாப்பு அமைச்சர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமே வினவ வேண்டும். உடன்படிக்கை செய்வதென்றால் அவரே செய்தாக வேண்டும். தலைமை அமைச்சரால் பாதுகாப்பு விவகாரங்களில் தலையிட முடியாது. ஆகவே இவை வெறுமனே மக்களை குழப்பும் நடவடிக்கைகள் என்பதே உண்மையாகும்.

எனினும் திருகோணமலை துறைமுகத்தை பன்னாட்டுத் துறைமுகமாக மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் எமக்கு உள்ளது. இப்போது கடற்படையின் பங்களிப்பில் திருகோணமலை துறைமுகம் கையாளப்பட்டு வருகின்றது. வெகுவிரைவில் அது பன்னாட்டுத் தரத்தைப் பெறும் - என்றார். (ம-61)

குடாவுக்கு வருகிறார் தலைமை அமைச்சர்

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். இந்தப் பயணத்தின் போதுவடமாகாணத்தின்அபிவிருத்திப் பணிகள் குறித்து அவர் கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது பயணத்தின் ஒரு பகுதியாக காங்கேசன்துறை பிரதேசத்துக்கும் தலைமை அமைச்சர் பயணிக்கவுள்ளதுடன் அந்தப் பிரதேசங்களில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிடவுள்ளார். (ம)

மகாவலி ஆற்றில் குதித்த மற்றையவரும் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜன. 31

கிண்ணியா பிரதேசத்தில் மகாவலி ஆற்றில் குதித்துக் காணாமல் போயிருந்த இரண்டாவது நபரின் சடலம் நேற்று கண்டெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்களை கடற்படையினர் நேற்றுமுன்தினம் சுற்றிவளைத்த போது மூவர் ஆற்றில் குதித்துள்ளனர். இதில் ஒருவர் உயிர் தப்பியிருந்ததுடன் ஏனைய இருவரும் காணாமல் போயிருந்தனர். அவர்களில் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்டது. இரண்டாவது நபரின் சடலம் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (ம-8)

இந்திய குடிமக்கள் இருவர் கைதாகினர்

கொழும்பு, ஜன. 31

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த இந்திய குடிமக்கள் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று அச்சுவேலிப் பொலிசார் தெரிவித்தனர்.

45 மற்றும் 50 வயதுடைய குறித்த நபர்கள் இருவரும் அச்சுவேலி பகுதியில் அமைந்துள்ள தொழிச்சாலையொன்றில் தொழில்புரிந்து வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-71)

இலங்கையில் கணினிகளை தாக்குகிறது. புதிய வைரஸ்

இலங்கையில் பயன்பாட்டிலுள்ள கணினிகளை புதிய வகை வைரஸ் தாக்கி வருகிறது என்று கணினி அவசரப் பிரிவு எச்சரித்துள்ளது. விண்டோஸ் இயங்கு தளம் ஊடாக இந்த வைரஸ் பரவி வருகிறது என்று தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் ரவிந்து மீகஸ்முல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

விண்டோஸ் 8.1 மற்றும் 10 ஆகிய இயங்கு தள அமைப்புகளுக்கு இதன் ஊடாக பாதிப்பு ஏற்படக்கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. ரம்பா என பெயரிடப்பட்டுள்ள இந்த வைரஸ், இலவசமாக பதிவிறக்கம் செய்யக்கூடிய மென்பொருள் ஊடாக பரவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

கடற்படையால் பயிற்சிகள் மேலும் முன்னெடுக்கப்படும்

லெப்டினன் கொமாண்டர் இசுருசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31

இலங்கை கடற்படையின் ஏற்பாட்டில் கடற்படைப் பயிற்சிகள் கடந்த 26ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரையில் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் இவ்வாறான பயிற்சிகள் இனிவரும் காலங்களில் மேலும் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார் லெப்டினன் கொமாண்டர் இசுருசூரிய தெரிவித்தார்.

'துறைமுகம் மற்றும் கடல்' என்னும் தொனிப்பொருளின் கீழ் இந்த கடற்படைப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது இலங்கை கடற்படைக் கப்பல்களான சிந்தரல, சாகர, சமுதுர, பிரதாப, சுரநிமில, மிஹிகத மற்றும் ரத்னதீப ஆகியனவும், கடலோரப் பாதுகாப்புப் படையின் சுரஷா மற்றும் சமூத் ராக்ஷா ஆகிய கப்பல்களும் துரித தாக்குதல் படகுகளும் ஈடுபடுத்தப்பட்டன. இதே வேளை இலங்கை வானூர்திப்படையின் வானூர்திகளும் இந்தப் பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறான பயிற்சிகள் இனிவரும்காலங்களில்மேலும்முன்னெடுக்கப்படும் என்று இசுருசூரிய தெரிவித்தார். (ம-31)

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கச்சென்ற

பொலிஸாரை தாக்கிய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் அடையாளம்!

சாவகச்சேரி, ஜன. 31

கெற்பேலிப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்காகச் சென்ற பொலிஸ் அலுவலர்களைத் தாக்கியவர்களில் இருவரை அடையாளம் காட்டினர் கொடிகாமம் பொலிஸ் நிலைய பொலிஸ் அலுவலர்கள்.

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பிரிவுக் குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழப்படுகின்றது என்று கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் நிலைய உப பரிசோதகர் உட்பட நான்கு பொலிஸ் அலுவலர்கள் உந்துருளிகளில் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். செல்லும் வழியில் உழவு இயந்திரம் ஒன்றில் மணல் ஏற்றிக் கொண்டு வந்தவர்களை உப பரிசோதகர் இறங்கி சாலையில் நின்று மறித்துள்ளார். எனினும், வாகனத்தை நிறுத்தாமல் உப்பரிசோதகரை மோதிய பின்னர் வாகனத்தை நிறுத்திவிட்டு சாரதி தப்பியோடியுள்ளார். காயமடைந்த உப பரிசோதகரை உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டு வரும் வழியில் பின்தொடர்ந்து வந்த நால்வர் வாகனத்தை வழிமறித்து செலுத்தி வந்த பொலிஸ் அலுவலரையும் பின்தொடர்ந்து உந்துருளியில் வந்த பொலிஸ் அலுவலர்களையும் தாக்கி விட்டு காயமடைந்த நிலையில் காணப்பட்ட உப பரிசோதகரைக் கீழே தள்ளி விட்டு உழவியந்திரத்தைக் கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களை அடையாளம் காட்டுவது தொடர்பான அடையாள அணிவகுப்பு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. தம்மைத் தாக்கியவர்கள் என்று சொல்லப்படும் முதலாம், நான்காம் சந்தேகநபர்களை பொலிஸார் அடையாளம் காட்டினார்கள். மூன்றாவது சந்தேகநபர் தலைமறைவாக உள்ளார் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. இதனால் சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் மீண்டும் அடையாள அணிவகுப்பை நடத்துமாறும் சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ம-9)

வலி. தென்மேற்குப் பிரதேச சபை

கரவெட்டிப் பிரதேச சபை

கட்சி பேதங்களைக் கைவிட்டு ஒன்றாகச் செயற்படவேண்டும்

உள்ளூராட்சி சபைகளுக்கு அமைச்சர் மனோ அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 31

உள்ளூராட்சி சபைகள் கட்சி பேதத்தைக் கைவிட்டு ஒன்றாக நின்று மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்று அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு அரச கரும மொழிகள் அமைச்சு ஒதுக்கிய நிதி ஊடாக நடைபெறும் செயற்பாடுகளைப் பார்வையிட அவர் நேற்று வருகை தந்தார். கரவெட்டி பிரதேச சபை, வலிகாமம் தென்.மேற்குப் பிரதேச சபை, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் போன்ற வற்றுக்கு அமைச்சர் நேரில் சென்றிருந்தார்.

கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் த. ஜங்கரன் தலைமையில் அமைச்சர் மனோவுக்கு வரவேற்பளிப்பு நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அமைச்சர் மனோ தெரிவித்ததாவது:

மக்களுக்குச் சேவையற்றவே மக்கள் உங்களை உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்துள்ளார்கள். ஆகவே கட்சி பேதமின்றி நீங்கள் அவர்களுக்குச் சேவையாற்றவேண்டும்.

நானொரு நாடோடித் தமிழன். நாடு முழுவதும் வாழும் பின்தங்கிய தமிழ் மக்களுக்கு சேவை செய்வதில் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு வருகிறேன்.

புத்தாடை தந்தால்
அலுமாரிக்குள் வையாதீர்

நிதி கிடைத்தால் நிதி திரும்பிச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒதுக்கப்படும் நிதி திரும்பிச் செல்வதானது, "புத்தாடை வாங்கிக் கொடுக்கும் போது அதை அணிந்து அழகு பார்ப்பதை விடுத்து அலுமாரிக்குள் வைத்து விட்டு அதை வாங்கிக் கொடுத்தவரிடம் திருப்பிக் கொடுப்பதற்குச் சமம்". அதற்கு இடமளியாதீர்கள். எனது அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி திரும்பி திறைசேரிக்குப் போகக் கூடாது என்பதற்காக நேரடியாக அந்தத் திட்டங்களைப் பார்வையிட்டு வருகிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலை செல்லவேண்டும்

இங்குள்ள சிலர் எனக்கு அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். ஏனென்று தெரியவில்லை. பிரதேச சபையை நடத்துபவர்கள் யார் என மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். நாம் கட்சி ரீதியாக அல்ல மக்களுக்கான தரகர்களாக இருந்து செயற்படுகிறோம்.

பள்ளிக் குழந்தைகள் நாடாளுமன்றம் சென்று அவதானித்த காலம் போய், இன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பள்ளி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் கடந்த காலத்தில் நாடாளுமன்றில் இடம்பெற்ற சம்பவங்கள் சான்று.

தொழிலாளர்களை விலைபேசி விட்டனர்

தோட்டத் தொழிலாளர் சம்பள விடயத்தில் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கங்கள் இணைந்து தோட்டத் தொழிலார் முதலாளிமார் சங்கங்களுடன் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. நாங்கள் கைச்சாத்திடவில்லை. சம்பளத் தொகையை நாங்கள் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம். மக்களை விலை பேசி விற்று விட்டார்கள்.

ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் அலரிமாளிகைக்குச்சென்றுதலைமை அமைச்சரிடம் அதைக் கொடுத்து தலைமை அமைச்சரும் அதில் உள்ளடங்குகிறார் என்ற தோற்றப் பாட்டைக் காட்டி விட்டார்கள். கூட்டு ஒப்பந்தத்தை இல்லாமல் செய்து சமூக பொருளாதாரத்துடன் கூடிய ஒரு நிலையை அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உருவாக்கிக்கொடுக்கவேண்டும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக்கட்சியின்கூட்டாளியாகஇருக்கலாம் ஆனால் நாங்கள் தான் அரசின் பங்காளிகளாக இருக்கின்றோம் - என்றார்.

வலி.தென்மேற்கு சபை

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் அமைச்சரின் பங்கேற்புடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை முன்னாள் தவிசாளரும் தற்போதைய உறுப்பினருமான சி.மகேந்திரன் அபிவிருத்தித் திட்டம் குறித்த கருத்திட்டம் ஒன்றை அமைச்சரிடம் கையளித்தார். மாதகல் உப அலுவலகத்துக்கு மனோ கணேசனின் அமைச்சின் 20 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் செய்யப்பட்ட கருத்திட்ட முன்னேற்றம் குறித்த விவரத்தை தவிசாளர் ஜெபநேசன் காணொலியில் காண்பித்தார். ஏனைய அபிவிருத்திகள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

(த-7,26,50,173)

அமைச்சர் மனோவை வரவேற்கும் நிகழ்வைப் புறக்கணித்த முன்னணி

வடமராட்சி, ஜன. 31

தேசிய ஒருமைப்பாடு அரச மொழிகள் சமுக மேம்பாடு இந்துசமய அலுவல்கள் அமைச்சர் மனோகணேசனுக்கு கரவெட்டி பிரதேச சபையில் நேற்று அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச்சேர்ந்த 7 உறுப்பினர்களும் கலந்து கொள்ளாது நிகழ்வை புறக்கணித்தனர்.

அமைச்சர் மனோகணேசன் பிரதேச சபைத்தலைவர் த.ஜங்கரனின் கோரிக்கையை ஏற்று பிரதேசத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படாத வீதிகளைச் சீரமைக்க 2 கோடி 10 இலட்சம் ரூபாவை சமூக மேம்பாடுஅமைச்சிலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார்.

இந்தநிதிமூலமாக அங்குள்ள 50 வீதிகள் சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

அமைச்சருடன் அமைச்சின் மேலதிகச் செயலர் ரவீந்திரன், இந்து கலாசார அமைச்சின் செயலர் எஸ். உமாமகேஸ்வரன், மேல்மாகாண சபையின் தமிழ்முற்போக்குக் கூட்டணி உறுப்பினர் பாஸ்கரா உள்ளிட்டோர் வந்திருந்தனர்.

நிகழ்வில் அமைச்சர் உரையாற்றியதும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது பகுதிகளின் அபிவிருத்திகள், கோவில்கள் சீரமைப்புகளுக்கு நிதி உதவி வழங்குமாறு கோரி மனுக்களைக் கையளித்தனர்.

அமைச்சர் மனோகணேசனின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட வீதிகள் சீரமைப்பின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதனைக்கண்டித்தே தாம் பணிப்புறக்கணித்தோம் என்று முன்னணியினர் தெரிவித்தனர்.

(த-173)

காணி விடுவிப்பை மைத்திரியின் கவனத்துக்கு கொண்டு செல்வேன்

அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கீரிமலைப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை விடுவிப்பது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபாலவின் கவனத்துக்கு கொண்டுசெல்வேன். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்தார்.

வலி. வடக்கில் சனசமூக நிலையங்களுக்கான உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதன்போது காணி விடுவிப்புத் தொடர்பில் அங்கஜனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பூர்வீகமாக வழிபட்ட விஷ்ணு ஆலயம், பாரம்பரியமான சுடுகாட்டுப் பகுதி மற்றும் அதற்குச் செல்வதற்கான பாதை கீரிமலை பிரதேசத்தினுள் காணப்படுகின்றது. இவற்றை விடுவிப்பது தொடர்பாக பலதரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளோம். அந்தப் பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாலும், அவர்கள் தமது இருப்பிடங்களை அமைத்துள்ளனர்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் அரச தலைவராகவும் இருந்த மகிந்த ராஜபக்சவால் கட்டப்பட்ட ஆடம்பர மாளிகை இருப்பதாலுமே அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. தற்போது சாதகமான நிலை தோன்றியுள்ளதால் அரச தலைவரின் பார்வைக்கு இதைக் கொண்டு சென்று தமது சொந்த நிலத்துக்குச் செல்ல நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

(ஒ,5,114)

யாழ்ப்பாண மாநகர சபைக்கு விரைவில் சுகாதாரப் பணியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சுகாதாரப் பணியாளர்கள் இணைத்துக்கொள்ளப்பட வுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை மாநகர சபை முதல்வர் இ. ஆனோல்ட், ஆணையாளர் இ.த.ஜெயசீலன் இணைந்து மேற்கொண் டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட தேவைக்கேற்ற அடிப்படையில் கடமையாற்றுவதற்கு ஏற்றவகையில் ஆண் விண்ணப்பதாரர்கள் ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர். விண்ணப்பதாரர் 18 வயதுக்கும் 45வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

பொருளாதார உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்களான உள்ளூராட்சி சபைக்கு உட்பட்ட கிராமிய வீதிகள், மீன்பிடி இறங்குதுறைகள், பயணிகள் இறங்கு துறைகள், மின்சார இணைப்புக்கள், கேணிகள் என்பவற்றுடன், புதிதாக மீள்குடியமர்வு நடைபெறும் பகுதிகளில் நீர்வழங்கல், கழிவறை வசதிகள், பாடசாலை உட்கட்டுமான அபிவிருத்திகள், மருத்துவமனை அபிவிருத்திகள் மற்றும் வாழ்வாதார சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டங்கள் உள்ளடக்கப்படும்.

காணாமல் ஆக்கப்பட்டோரைக் கொண்டகுடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் குடும்பங்கள், கண்ணிவெடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், உள்ளக இடம்பெயர்ந்த குடும்பங்கள், தாயகம் திரும்புபவர்கள், மறுவாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டவுள் ளன.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி கிடைத்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-50)

ஆயுள்வேத நிலையமாக இயங்கிய விபச்சார விடுதி சுற்றிவளைப்பு

6 பேர் கைது செய்யப்பட்டனர்

கொழும்பு, ஜன. 31

ஆயுள்வேத நிலையம் என்னும் பெயரில் இயங்கி வந்த விபச்சார விடுதி சுற்றிவளைக்கப்பட்டது. சந்தேகத்தில் அங்கிருந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



புக்முவ வீதி இராஜகிரிய வீதியிலுள்ள விடுதியில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வெலிகடைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய புதுக்கடை இல 04 நீதிவான் நீதிமன்ற அனுமதியுடன், மேற்படி விபச்சார விடுதி கடந்த திங்கட் கிழமை இரவு சுற்றிவளைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. ஆண் ஒருவர் உட்பட விபச்சாரத்தில்ஈடுபட்டனர்என்றகுற்றச்சாட்டில் 6 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் 23 வயதுக்கும் 32 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள். அவர்கள் வவுனியா, ஹொகன்தர, மதகம, பலாங்கொடை, தணமல்வில, பொரளை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த-71)

சிறுபான்மையின....

அடுத்த அரச தலைவர் தேர்தலில் தான் களமிறங்கத் தயார் என்று தெரிவித்துள்ளார் கோத்தபாய ராஜபக்ச. இது தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ரஞ்சன் ராமநாயக்கவிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது:
கோத்தபாய ராஜபக்ச எத்தனை தடவைகள் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டாலும் அவரது வாழ்நாளில் அவருக்கு சிறுபான்மை மக்கள் ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள். தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் நூற்றுக்கு 51 வீத வாக்குகள் பெற வேண்டும். ஆனால் சிறுபான்மை மக்களுடைய வாக்குகளின்றி அதனைப் பெறமுடியாது.
தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக அவரால் முன்னெடுக்கப்பட்ட விடயங்களே அதற்கான காரணமாகும். கடந்த காலங்களில் இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலை நோக்கும் போது நூற்றுக்கு 63 வீத வாக்குகளை சந்திரிகா குமாரணதுங்க பெற்றிருந்தார். அதேபோன்று போரின் பின்னர் மகிந்த ராஜபக்ச 53 வீத வாக்குகளையே பெற்றிருந்தார். எனினும் அதற்கு பின்னர் இடம்பெற்ற தேர்தல்களில் அதனை விடக் குறைவான வாக்குகளே ஒரு தரப்புக்குக் கிடைக்கப்பெற்றன. கோத்தபாய தேர்தலில் போட்டியிட்டால் 40 வீதவாக்குகளைத்தான் அவரால்பெறமுடியும். காரணம் அவருக்கு எதிராக ஊழல் மோசடி தொடர்பில் பல்வேறு வழக்குகள் காணப்படுகின்றன. "வெள்ளை வான் கடத்தலின் தந்தை" என அவர் வர்ணிக்கப்படுகின்றார். அத்தோடு ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலையுடன் அவருக்கு தொடர்பு உள்ளது என்று கூறப்படுகின்றது. எனவே அவ்வாறான ஒருவருக்கு வாக்களிப்பதற்கு மக்கள் முட்டாள்கள் அல்லர்.
அவருடன் எமக்கு எந்தத தனிப்பட்ட பிரச்சினைகளும் இல்லை. ஆனால் வெளிநாட்டு குடியுரிமையைக் கொண்ட அவர் மீது எந்த வகையில் நம்பிக்கை வைப்பது என்பதே எமது கேள்வியாகும். அதனை வைத்துக் கொண்டு அவர் மீண்டும் அமெரிக்காவுக்குச் செல்லக் கூடும். அத்தோடு அவரை விட சிறந்தவர்கள் அந்தத் தரப்பில் உள்ளனர் - என்றார்.
(ம-31)

தமிழர்...

விலகவேண்டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல.
ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை வலியுறுத்தி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு நாடாளாவிய ரீதியில் பலரும் ஆதரவு கொடுத்தனர். எனினும் நாளொன்றுக்கு 700 ரூபா என்ற அடிப்படையிலேயே அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கு தமிழர் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். மனோ கணேசனின் விமர்சனத்தை வரவேற்ற கெஹலிய அரசில் இருந்து தமிழர் முற்போக்குக் கூட்டணி விலக வேண்டும் என்று வலியுறுத்தினார்.
அமைச்சர் மனோகணேசன் முன்வைத்த அரசுக்கு எதிரான விமர்சனம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். காரணம் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதில்லை. அதனையேதற்போதும்செய்துள்ளது. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில் கைசாத்திடும் முதன்மையான தொழிற்சங்கமான தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் என்பன பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.
இவ்வாறு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசுக்கு ஆதரவளித்து அதன் பங்காளிக் கட்சியாக செயற்படுவது பயனற்றதொன்றாகும். எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசில் ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படும் என்று வலியுறுத்தினோம். எனினும் அதற்கான சந்தர்ப்பத்தை ஜக்கிய தேசிய கட்சியே இல்லாமல் செய்தது - என்றார். (ம-61)

சந்தேகநபரை...

விட்டது. குறித்த வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணை அறிக்கையொன்றை தாக்கல் செய்தனர்.
வழக்கில் சந்தேகநபரான முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க சார்பில் முன்னிலையான சிரேஸ்ட சட்டத்தரணி துசித் ஜோன்தாசன் குறித்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் மேலதிக அறிக்கை தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்தார்.
அதாவது குற்றப் புலனாய்வு பிரிவினர் சமர்ப்பித்த வழக்கு இலக்கம் வித்தியா படுகொலை வழக்கு இலக்கம் எனவும், அந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது என்றும் குறித்த வழக்கின் சந்தேகநபராக கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதியே கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவித்தார்.
இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக சரியான தகவலை மன்றுக்கு தெளிவுபடுத்துமாறும், குறித்த வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் அந்தோனிப்பிள்ளை யூட்சன் உத்தரவிட்டார். (ம-26)

ஞானசாரதேரரை...

அமைதிக்கு நேரடியாகப் பங்கம் விளைவித்து இனவாதத்தைத் தூண்டும் ஒருவர். அத்தோடு நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் அவரைச் சுதந்திர தினத்தன்று விடுதலை செய்வது சுதந்திர தினத்தை அவமதிக்கும் செயலாகும்.
மேலும் கடந்த காலங்களில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். எனினும் அதில் எதனையுமே நிறைவேற்றாது ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.
நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏற்படுத்தப்பட்டு இந்த வருடத்துடன் 40 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதனைக் கொண்டாடும் முகமாகவா அரச தலைவர் ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பு வழங்குகின்றாரா? என்பதே எமது கேள்வியாகும். தமிழ் இளைஞர்கள் பலரையும், தமிழ் மக்களது சுதந்திரத்தையும் எதிர்காலத்தையும் சிறையில் அடைத்து விட்டு அவரை விடுதலை செய்வதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டால் இவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் - என்றார். (ம-61)

யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை 372 கான்களில் எதனோல் கைப்பற்றப்பட்டது. இதனை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இந்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. மன்றின் உத்தரவுப்படி எதனோல் கான்கள் அழிக்கப்பட்டன. (ம-6)

சட்டவிரோத...

அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:
வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் அறவிடும் போது குறித்த பணம் தேசிய பாடசாலையாயின் கல்வி அமைச்சின் செயலரிடமும், மாகாணப் பாடசாலையாயின் மாகாண கல்வி செயலரிடம் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் தம்முடைய விருப்பின் பிரகாரம், சுற்று நிருபத்தை மீறிப் பல தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் பணம் அறவிடுகின்றனர் என்று தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
இதனால் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் பணம் அறவிடும் அதிபர்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தி உடன் அறிக்கையொன்றைத் தருமாறு கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் - என்று குறிப்பிட்டுள்ளது. (ம)

கால அவகாசம்...

இவ்வாறான தீர்மானம் ரெலோ பொதுக்குழுக் கூட்டத்துக்கு, அந்தக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ளனர்.
இது தொடர்பில் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் ந.சிறீகாந்தா, உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது:
மேற்படி தீர்மானம் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் எடுத்துக் கொள்வதற்காகக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி திருகோணமலையில் 243 உறுப்பினர்களைக் கொண்ட எங்கள் கட்சியின் பொதுக்குழு கூடவுள்ளது. இதன்போது இந்தத் தீர்மானத்துக்கு பொதுக்குழு அனுமதி வழங்கும் என்று நம்புகின்றேன்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது. கால அவகாசம் வழங்கப்படுவதானது ஐ.நா. தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியே. இதன் அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டும். ஐ.நா. பொதுச் சபைக்கு இலங்கை விவகாரம் பாரப்படுத்தப்படவேண்டும். இலங்கை அரசுக்கு அழுத்தம் வழங்கப்பட வேண்டும்.
போர்க்குற்ற விவகாரம் தொடர்பில் தெற்கில் ஜக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி என்று சகல கட்சிகளும் ஓர் அணியில்தான் உள்ளன. தமது படையினரைக் காப்பாற்றுவதில் அவர்கள் ஒரு புள்ளியில் சங்கமிக்கின்றனர். மறுபுறத்தில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றது?
தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மூலையிலிருந்து அறிக்கை அரசியல் செய்கின்றன. இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கப்படுவதற்கு எதிராக, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கோரி பரந்துபட்ட மக்கள் எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.
வடகிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளில் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் ஒரே நிலைப்பாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டி ஒரு பொதுநிலைப்பாட்டில் இந்த விடயத்தை நகர்த்தவேண்டும். எதிர்வரும் 16ஆம் திகதி கட்சியின் பொதுக்குழுவில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், அடுத்த ஒரு வார காலத்தினுள் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துவோம். இலங்கை விவகாரத்தை அடுத்த கட்டத்துக்கு எப்படி நகர்த்துவது என்பது தொடர்பிலும் ஆராய்வோம் - என்றார். (ம-ஒ,5,26)

போதைப்பொருள்...

கோணாவில் மகா வித்தியாலயத்தில், அரச தலைவரின் பணிப்புக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட போதை ஒழிப்பு வார நிகழ்வுகள் கடந்த புதன் கிழமை இடம்பெற்றன. தமது ஊரில் இடம்பெறும் கஞ்சா மற்றும் கசிப்பு வியாபாரம் தொடர்பில் மாணவன் ஒருவன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தான். மறுநாள் வியாழக்கிழமை மாணவன் வீட்டுக்குச் சென்ற சிலர், பெற்றோருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். மாணவனை எச்சரித்தும் சென்றுள்ளனர். இது தொடர்பில் மாணவனின் பெற்றோர் பாடசாலை ஆசிரியருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர். இந்த விடயம் ஊடகங்களிலும் வெளியானது. இந்த நிலையில் மாணவன் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் கோணாவில் கிழக்குப் பகுதியில் உந்துருளியில் வந்தவர்களால் இடித்து வீழ்த்தப்பட்டுள்ளான்.
இதுதொடர்பில்பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்தனர். மாணவனின் வீட்டுக்கு கடந்த வியாழக்கிழமை சென்று முரண்பட்ட சந்தேகத்தில் மூன்று பெண்களை நேற்றுக் காலை கைது செய்தனர்.
இதேவேளை, கோணாவில் மகா வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி நேற்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இதற்காக ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் அலங்கார ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். இதன்போது தடிகள், பொல்லுகளுடன் பாடசாலைக்குள் நுழைந்த கும்பல் ஆசிரியர்களைத் தகாத வார்த்தைகளால் பேசியதுடன், அங்கிருந்தவர்களைத் தாக்க முற்பட்டுள்ளது. ஒரு சில ஆசிரியர்களின் பெயர்களைக் கேட்டும் அச்சுறுத்தியுள்ளது. பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட போதும் அவர்கள் உடனடியாக அங்கு வரவில்லை. இதனையடுத்து அங்கிருந்த ஆசிரியர் ஒருவர், கரவெட்டிப் பிரதேச சபையின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு தகவல் தெரிவித்துள்ளார். அவர் பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய பின்னர் பாடசாலைக்கு அவர்கள் வந்துள்ளனர். அதற்கிடையில் தாக்குதல் நடத்தவந்த கும்பல் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளது. ஆசிரியர்களைப் பொலிஸார் பாதுகாப்பாக அனுப்பி வைத்துள்ளனர்.
மெய்வன்மைப் போட்டி நேற்று நடைபெறவிருந்த நிலையில் அச்சுறுத்தலை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (ம-ஒ,5,214)

கைதான...

என்று நாவாந்துறை மக்கள் குற்றம் சுமத்தினர்.
'கடந்த 23ஆம் திகதி எமது பகுதியில் 12 வயதுச் சிறுமியை உந்துருளியில் வந்த இளைஞன் கடத்திச் செல்ல முற்பட்டான். இருப்பினும் சிறுமி பத்திரமாக மீட்கப்பட்டாள். கடத்த முற்பட்ட இளைஞன் தப்பிச் சென்றுவிட்டான். உந்துருளி இலகத்தைக் குறித்து வைத்துக் கொண்டோம். இன்றும் (நேற்று) அதே உந்துருளியில் இளைஞன் ஒருவன் உலாவுவதை அவதானித்தோம். சந்தைப் பகுதியில் அவரை மடக்கிப் பிடித்தோம்' என்று நாவாந்துறைப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
இளைஞனை மடக்கிய மக்கள் அவரை கம்பத்தில்கட்டிவைத்துமுறையாகக்கவனித்தனர். பொலிஸாருக்கு அறிவித்தபோதும் 2 மணி நேரம் தாமதமாகவே அவர்கள் அங்கு வந்தனர்.
பொலிஸாரிடம் இளைஞன் ஒப்படைக்கப்பட்டான். இதன்போது, தான் காத்தான்குடியைச் சேர்ந்தவர் என்றும் சமையல் வேலைக்காகவே யாழ்ப்பாணம் வந்தேன் என்றும் இளைஞன் தெரிவித்துள்ளான்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 24ஆம் விடுதியில் இளைஞனை பொலிஸார் சிகிச்சைக்காகச் சேர்ப்பித்தனர். அங்கிருந்து மற்றொரு விடுதிக்கு நேற்று மாலை 3.30 மணியளவில் இடமாற்றும் போது இளைஞன் தப்பித்துச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இளைஞனுக்கு மருத்துவமனையில் கைவிலங்கு இன்றியே சிகிச்சை வழங்கப்பட்டது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-ஒ,5,8,26,105)

ரணிலை...

முற்போக்குக் கூட்டணி, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நாளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.
தோட்ட கம்பனிகளுடன் செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் மிகப்பெரிய விமர்சனத்தை உருவாக்கியுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலையீட்டில் இவை இடம்பெற்றுள்ளமை அரசில் அங்கம் வகிக்கும் தமிழர் தரப்புக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்தே தலைமை அமைச்சர் தமிழர் முன்னணி இடையில் நாளை சந்திப்பு நடைபெறவுள்ளது.
இது குறித்து அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்ததாவது:
நாம் எதிர்பாராத வகையில் கூட்டு ஒப்பந்த நகர்வுகள் இடம்பெற்றுள்ளன. மலையக மக்களின் பிரதிநிதிகளாக நாம் அரசில் பங்காளிகளாக அங்கம் வகித்து வருகின்றோம். அரசைப் பலப்படுத்த மலையக மக்களின் முழுமையான ஆதரவை நாம் பெற்றுக்கொடுத்துள்ளோம். அவ்வாறு இருக்கையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இது குறித்துக் கலந்துரையாடாது தன்னிச்சையாக செயற்பட்டமை எமக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே நாம் தலைமை அமைச்சருடன் கலந்துரையாட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. காத்திரமாக சில காரணிகள் குறித்து நாம் கலந்துரையாடவேண்டும் என்று தெரிவித்தார்.
இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் தெரிவித்ததாவது:
கூட்டு ஒப்பந்தத்தில் அரசு ஒரு தரப்பாக இருக்கும் வரையில் இந்தப் பொறிமுறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென தொடர்ச்சியாக தமிழ் முற்போக்குக் கூட்டணி அழுத்தம் கொடுத்து வந்தது. ஆனால் அரசு அதற்கு உரிய பதிலை வழங்கவில்லை. தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசின் பங்காளிக் கட்சியாகவுள்ளது. ஆனால் கூட்டு ஒப்பந்தம் குறித்து எம்மிடம் எவ்வித பேச்சுகளும் இடம்பெற்றிருக்கவில்லை. ஆகவே நாம் தலைமை அமைச்சரைச் சந்திக்கவுள்ளோம் - என்றார். (ம-31)

சிறார்கள் ஏர் பிடித்து, உழவு செய்து, அறுவடை செய்து, நெல் குற்றுகின்றனர்.

உழவர் தின விழாவும் பொங்கல் நிகழ்வும்

சாவகச்சேரி, ஜன 31

யாழ்ப்பாணம், சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தில் தமிழர் பாரம்பரியங்களை சிறார்கள் மூலம் எடுத்தியம்பும் உழவர் தின விழாவும் பொங்கல் நிகழ்வுகளும் நேற்று நிலைய முன்றலில் இடம்பெற்றன.

சிறார்கள் மூலம் ஏர் பிடித்து, உழவு செய்து, நெல் விதைத்து, களைபிடுங்கி அறுவடை செய்து, நெல் குற்றுதல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்று பொங்கல் பொங்கப்பட்டது.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஐ.தே கட்சியின் தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் கு.சர்வானந்தா, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச பிள்ளைப்பேறு அபிவிருத்தி அலுவலர் தெ. வினோதன், பிரதேச கலாசார அலுவலர் திருமதி அன்பரசி அருட்செல்வம், கலாசார அபிவிருத்தி அலுவலர் திருமதி செ. பிரியதர்சினி, ஐ.தே.கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மருத்துவர் தியாகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ள ஏற்பாடாகியிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களினால் அவர் வருகை தராத நிலையில் அவரால் அனுப்பி வைக்கப்பட்ட தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நிலையத்தில் கற்கும் 65 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-9)

நாளைய மெய்வன்மை போட்டிகள்

கொடிகாமம், ஜன.31

கிளிநொச்சி புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டிகள் பாடசாலைமைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் அருட்சகோதரி எவறிஸ்ரா பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சிகல்விவலய உடற்கல்விசுகாதாரபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.காந்தச்செல்வன், சிறப்பு விருந்தினராக கல்வி வலய உடற் கல்வியும் சுகாதாரமும் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஏ.பவானந்தன், மதிப்பு விருந்தினர்களாக உருத்திரபுரம் ஆரோபணம் நிறுவன பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் அமலதாஸ், உருத்திரபுரம் நலன்விரும்பி கே.தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

✦✦✦

அளவெட்டி,ஜன.31

யாழ்ப்பாணம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஸ்கந்தவரோதயன் எம்.பூலோகராஜா (கனடா) கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-36)

✦✦✦

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்ப்பாணம் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ப.சுதானந்தராஜா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் கலந்து கொள்ளவுள்ளார்.

எமது தேவைகள் இன்னமும் முழுமைப்படுத்தப்படவில்லை

ரவிகரன் ஆதங்கம்

முல்லைத்தீவு, ஜன. 31

போர் முடிந்து பத்து ஆண்டுகளாகும் நிலையிலும் பொருளாதார ரீதியாகவும் ஏனைய உரிமை சார்ந்த ரீதியாகவும் எமது தேவைகள் இன்னமும் முழுமைப்படுத்தப்படவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராயாவின் நிதி ஒதுக்கீட்டில், மக்கள் நலன் காப்பகத்தால் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு உலருணவும் பொதி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வண்ணாங்குளம் பகுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார ரீதியாகவும், உரிமை சார்ந்த ரீதியாகவும் எங்களுடைய தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருந்தால் போரே இடம்பெற்றிருக்காது.

போர் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், எங்கள் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. எங்களுடைய தலைவர்கள் இதற்காகத்தான் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

மக்களின் வாழ்வைமேம்படுத்தும் நடவடிக்கைகள் எவையும் எங்கள் பிரதேசங்களில் முழுமைப்படுத்தப்படவில்லை. கிடைக்கின்ற வாய்ப்புக்கள் ஊடாக வீதிகளையும், ஒருசில கட்டுமானப் பணிகளையும், வாழ்வாதாரத்துக்கான உதவிகளையும் நாங்கள் முன்னெடுக்கின்றோம்.

எங்களுடைய பாதிக்கப்பட்ட இடங்கள் முழுமையாகக் கட்டமைக்கப்படவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் முழுமையாகக் கிடைக்கவும் உரிய வழிவகைகளை அரசு செய்யவேண்டும் - என்றார். (ஒ,5,246)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் மறைகாணி விரைவில் பொருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 31

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்தை மற்றும் முக்கிய சந்திகளில் மறைகாணி (சி.சி.ரி.வி) பொருத்தும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. இதற்கான கேள்விகோரல் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நல்லூர் பிரதேச சபையில் கடந்த ஆண்டு இடம் பெற்ற சபை அமர்வில், மறைகாணி பொருத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

திருநெல்வேலி சந்தையின் உட்புறம் மற்றும் வெளிப்புறம், கொக்குவில் சந்தி, கோண்டாவில் சந்தி, திருநெல்வேலிச் சந்தி, ஓட்டுமடம் சந்தி, ஆடியபாதம் சந்தி ஆகியவற்றிலேயே முதல்கட்டமாக மறைகாணிகள் பொருத்தப்படவுள்ளன.

வீதியோரங்களில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவோரைக் கண்காணிக்கவும், சந்தை வளாகங்களைச் சுத்தமாக வைத்திருக்கவும், குற்றச் செயல்களைக் கண்காணிக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஒ,5,8,17)

தீயில் எரிந்தது குடிசை



யாழ்ப்பாணம், ஜன. 31

நள்ளிரவில் தீ வைத்துக் குடிசை வீடு விசமிகளால் எரியூட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்றுஅதிகாலை 1.30 மணி அளவில் தீ வைக்கப்பட்டுள்ளது என்று வீட்டில் குடியிருந்தவர் தெரிவித்தார்.

குறித்த குடிசை இருந்த காணி அரசகாணி எனவும் அந்தக் காணி உரிமம் தொடர்பில் நீதி மன்றில் வழக்கு விசாரணையில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-160)

ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறு இழப்பீடாக ரூ.50 ஆயிரம் வழங்க பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

தனியார் தொலைக்காட்சி ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்து அவரைத் தாக்க முற்பட்டமை மற்றும் அவரது ஒளிப்பதிவுக் கருவியைச் சேதப்படுத்தியமை ஆகிய குற்றச் சாட்டுக்களில் எதிரியாக இனம்காணப்பட்ட இரும்பக உரிமையாளர், ஊடகவியலாளருக்கு இழப்பீடாக 50 ஆயிரம் ரூபாவை வழங்கியதால், யாழ்ப்பாண நீதிமன்றால் வழக்கு இணக்கத்துடன் முடிவுறுத்தப்பட்டது. இனி வரும் காலங்களில் இவ்வாறான குற்றத்தை மீளவும் செய்யக் கூடாது என்று எதிரியை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி.சாமி எச்சரித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்திக்கு அருகாமையிலுள்ள இரும்பகம் அடாவடிக் கும்பலால் 2018ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி தாக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர் செய்தி சேகரிக்கச் சென்றிருந்தார். அவர் செய்தி சேகரிப்பதைத் தடுத்த அந்த இரும்பகத்தின் உரிமையாளர் மற்றும் சிலர், அவரது ஒளிப்பதிவுக் கருவியைப் பறித்துச் சேதப்படுத்தினர்.

ஒளிப்பதிவுக் கருவியைச் சேதப்படுத்தியமை தொடர்பில் ஊடகவியலாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. ஒளிப்பதிவுக் கருவியைச் சேதப்படுத்தியவர்களையும் அவர் பொலிஸாரிடம் அடையாளம் காட்டியிருந்தார்.

இரும்பக உரிமையாளர் மற்றும் அவரது சகோதரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்து அவரைத்தாக்க முற்பட்டமை மற்றும் அவரது ஒளிப்பதிவுக் கருவியைச் சேதப்படுத்தியமை ஆகிய குற்றச் சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் முதல் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

பொலிஸாரின் அறிக்கையை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபர்களை நீபந்தனையுடனான பிணையில் விடுவித்தார். அதனைத் தொடர்ந்து அந்த வழக்கு சுமார் 10 மாதங்களாக தொடர் விசாரணையில் இருந்தது.

வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி மன்றில் தோன்றி பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு இழப்பீடு வழங்கி வழக்கை இணக்கத்துடன் முடிப்பதற்கு விண்ணப்பம் செய்தார். எதிரிகள் தரப்பு விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா என்று ஊடகவியலாளரிடம் மன்று கேள்வி எழுப்பியது. அதனை ஏற்றுக்கொண்டு வழக்கை இணக்கத்துடன் முடிக்க ஊடகவியாளர் மன்றிடம் சம்மதம் தெரிவித்தார். (ஒ,5,37)

வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31

வடக்கு மாகாண கல்வி நிர்வாக சேவை தொழில் வாண்மையர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் க.பிறெட்லி ஜெனார்ட் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் கல்வி நிர்வாக சேவை அலுவலர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

சாவகச்சேரி ந.சபையில் சிறப்புற்றது பரிசளிப்பு

சாவகச்சேரி, ஜன. 31

சாவகச்சேரிநகரசபையின்மீசாலை.நுணாவில், சாவகச்சேரி ஆகிய பொது நூலகங்களில் மாணவர்கள் வாசகர்களிடையே நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு சபை பொன்விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக சபையின் ஓய்வு பெற்ற பதில் நிர்வாக அலுவலர் திருமதி கலாவதி கணேசலிங்கம், இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.முரளிதரன், கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் சி.சிவரூபன், தொழிலதிபர்களான கலாநிதி வை.சிவராசா, த.ஜெயந்தன், எஸ்.சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் முன்பள்ளி மாணவிகளின் வரவேற்பு நடனம்,சாவகச்சேரிநோ.க.த.க.பாடசாலை மாணவியின் பேச்சு, கைதடி நபீல்ட் பாடசாலை மாணவியின் நடனம், கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை மாணவர்களின் நாடகம் போன்ற கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

மூன்று பொது நூலகங்களால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், வாசகர்களுக்கு நூலக ரீதியாக விருந்தினர்கள் பரிசில்களை வழங்கினர். (ஜ-9)

மெய்வன்மைப் போட்டியும் மைதானத்திறப்பு நிகழ்வும்

கொடிகாமம், ஜன 31

யாழ்ப்பாணம் இயற்றாலை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியும் மைதானத் திறப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி த.ஸ்ரீமோகன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு பழைய மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் அனுசரணையில் புதிதாக அமைக்கப்பட்ட மைதானத்தின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து, மெய்வன்மைப்போட்டிகளை ஆரம்பித்துவைத்தார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிப்பணிப்பாளர் சோ.திருக்குமரன், மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி சுகிர்தராணி நகுலேஸ்வரன், பழைய மாணவனும் ஸ்ரீபாரதி வித்தியால ஆசிரியருமான த.தர்மசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-159)



யாழிலும் படைப்புழு தாக்கம் அவதானிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று இடங்களில் படைப்புழுவின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. சோளன் செய்கையையே படைப்புழு தாக்கியுள்ள தாக மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் படைப்புழுத் தாக்கம் விவசாயத்துறைக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. வடக்கிலும் இதன் தாக்கம் தற்போது அவதானிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பலாலி, விடத்தற்பளை, சரசாலை ஆகிய இடங்களில் சுமார் 50 ஏக்கர் சோளன் பயிர்ச்செய்கையை படைப்புழு தாக்கியுள்ளது. படைப்புழு தொடர்பில் விவசாய அமைப்புகளுக்கும் துறைசார்ந்த அலுவலர்களுக்கும் விழிப்பூட்டும்செயலமர்வுஇன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அதன் பின்னர் கமநல சேவைகள் நிலையத்தின் ஊடாக விவசாயிகளுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ.5,7)



செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், ஜன. 31

யாழ்ப்பாணம்கெற்பேலிஅ.த.கபாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.ஞானராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினராகபழையமாணவன்கு.சர்வானந்தன், மதிப்புறு விருந்தினராக கெற்பேலி கிராம அலுவலர் க.தனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாரதிஇல்லம், கம்பன்இல்லம்ஆகிய இரண்டுஇல்லங்களாகப்பிரிக்கப்பட்டு செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் இடம்பெற்றன.

300 புள்ளிகளைப் பெற்று கம்பன் இல்லம் முதலாம் இடத்தையும் 275 புள்ளிகளைப் பெற்று பாரதி இல்லம் இரண்டாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ஜ-159)

✦✦✦

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்ப்பாணம் அத்தியார் இந்துக் கல்லூரியின் விழையாட்டு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் பாடசாலை முதல்வர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.

நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிக்குமார், யாழ். கல்வி வலயச் செயற்பட்டு மகிழ்வோம் பொறுப்பாசிரியர் சி.சிவகாந்தி, வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் இ.செல்வராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க)

பனை சார் பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன. 31

பனை அபிவிருத்தி சபையின் பனை சார் பயிற்சி வழங்கும் செயற்பாடுகள் நாளைய தினம் ஆரம்பிக்கப்படும் என்று யாழ்ப்பாணம் பனை அபிவிருத்தி சபையின் தலைமை காரியாலயம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பனை அபிவிருத்தி சபையின் இந்த வருட செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கு 36 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் காலாண்டு நிதியாக தற்போது 11 மில்லியன் ஒதுக்கப்பட்டது. பனை சார் உற்பத்தி பொருள்களை செய்வதற்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இவை நாளைய தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை,சாவகச்சேரி, அல்லைபிட்டி ஆகிய பிரதேசங்களில் முதற் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. பனை சார் உணவுகள்,அலங்காரப் பொருள்கள்,பின்னல் வேலைகள் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஒரு பிரிவில் 23 தொடக்கம் 30 வரையில் உள்வாங்கப்பட்டு6 மாதம் மற்றும் ஒரு வருடப் பயிற்சியாக நடைபெறவுள்ளது. (ஜ-7)

கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா,ஜன. 31

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 150 பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ச.கீதனின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் வவுனியாவைச் சேர்ந்த மயூரன், நெதர்லாந்தைச் சேர்ந்த ரகுநாதன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ச.கீதன், வவுனியாமாவட்ட அமைப்பாளர் விஜயகுமார், துணை அமைப்பாளர் ராஜன், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் உறுப்பினர்களான சந்திரபத்மன், பார்த்தீபன் , தமிழ் ஈழ விடுதலை இயக்க கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-110)

மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்.ஜன.31

யாழ்ப்பாணம் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.மோகனராஜன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவருமான மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் ப.சசிக்குமார், கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிப்பணிப் பாளர் அ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ)

✦✦✦

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை அருமைத்துரை மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கு.தீலீபன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவ பணிப்பாளர் ச.ரவி ,சிறப்பு விருந்தினராக ஜேர்மனியில் வசிக்கும் பழைய மாணவன் இ.சத்தியநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ)

✦✦✦

யாழ்ப்பாணம்.ஜன 31

யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் ப.பார்த்தீபன்,சிறப்புவிருந்தினராகவடக்குமாகாண உடற்கல்வி டிப்ளோமா தலைவரும் பழைய மாணவருமான ப.தர்மகுமாரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ)

✦✦✦

கொடிகாமம், ஜன. 31

கிளிநொச்சிமுரசுமோட்டைஅந்தோனியார் நோ.க.வித்தியாலயத்தின்இல்லமெய்வன்மைப்போட்டிகள்பாடசாலைமைதானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் செல்வி க. இந்திராதேவி தலைமையில்நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை சேவைக்காலஆசிரியஆலோசகர்தி.சிவரூபன், சிறப்பு விருந்தினர்களாக கோரக்கன்கட்டுஅபிவிருத்திஅலுவலர்இ.தர்மேந்திரா, பன்னங்கண்டி கிராம அலுவலர் சு. இந்திரன், கோரக்கன்கட்டு கிராம அலுவலர் கோ.சேகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-159)

✦✦✦

கிளிநொச்சி,ஜன. 31

கிளிநொச்சி செல்வாநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் சி.கேதீஸ்வரன்தலைமையில்நடைபெறவுள்ளது.

முதன்மைவிருந்தினராககரைச்சிகோட்டக் கல்வி அதிகாரி சு.தர்மரட்ணம், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயம் செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் ப.சசிரதன், மதிப்புறு விருந்தினர்களாக கு.சுகந்தன், கிராம அலுவலர், பங்குதந்தை அமல்ராஜ், முத்துமாரி அம்மன் ஆலய விபுலானந்த குருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-222)

பம்பைமடுவில் கொட்டப்படும் குப்பைக் குழப்பத்துக்கு முடிவு

வவுனியா,ஜன.31

வவுனியா பிரதேசத்தின் கழிவுகள் பம்பைமடுவில் கொட்டப்படுவதால், தமது கிராமம் பல்வேறு பாதிப்புக்களைச் சந்திப்பதாகத் தெரிவித்து, சாளம்பைக் குளத்தில் வசிக்கும் இஸ்லாமிய மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் குப்பைமேட்டுக்குச் செல்லும் பிரதான வாயிலைமறித்த பொதுமக்கள் அவ்விடத்தில் பந்தல் அமைத்து தொடர்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொதுமக்கள் நீண்டகாலமாக இப்பகுதியில் கழிவுகள் கொட்டபடுகிறது. இதனால் எமது கிராமத்தில் வசிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. துர்நாற்றம் வீசுவதுடன், இலையான்கள் கொசுக்களின் தொல்லைகள் அதிகமாக காணப்படுகின்றன. இதனால் புதுவிதமான தொற்றுநோய்கள் ஏற்படுகின்றன.

குப்பை மேட்டை எரித்து விடுவதால் அதிலிருந்து வெளிவரும் புகைமண்டலம் சுவாசப் பாதிப்புக்களை உருவாக்குகிறது. கர்பிணிப் பெண்கள் முதல், சிறுகுழந்தைகள் வரை அனைவரும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பலவருடங்களாக உரிய அதிகாரிகளுக்கு தெரியபடுத்தியும் எவரும் கரிசனைகொள்ளவில்லை. நாம் பொறுமையிழந்துள்ளோம். குறித்த குப்பை மேடு அகற்றப்படாவிடில் போராட்டத்தை நிறுத்தமாட்டோம் எனத் தெரிவித்ததுடன், குப்பைகளை ஏற்றிவந்த உழவியந்திரங்களையும் உள்ளே செல்ல அனுமதிக்காது பாதைகளை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ்குமார் பயணம் செய்திருந்ததுடன், விடயம் தொடர்பாக ஆர்பாட்டக்காரர்களுடன் பேசியிருந்தார். குப்பைமேட்டை அகற்றுவது தொடர்பாக அனைத்துத் தரப்புக்களையும் உள்ளடக்கிய வகையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. அதில் சரியான தீர்வு ஒன்று வழங்கப்படும் எனவே போராட்டத்தைக் கைவிடுமாறு கோரியிருந்தார். இதற்கு எதிர்புத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நீங்கள் கலந்துரையாடலை முடித்துவிட்டு நாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பகுதிக்கு வருகைதந்து, முடிவைக்கூறுமாறும் நாம் எதிர்பார்த்த தீர்வு கிடைத்தால் போராட்டத்தைக் கைவிடுவதாகவும் தெரிவித்தனர். போராட்டம் காரணமாக மாவட்டத்தின் கழிவகற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து.பிரதேசத்தின் குப்பைகளை அகற்றும் ஊழியர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மாவட்ட செயலகத்துக்குமுன்புஒன்றுகூடியதுடன்.கழிவகற்றும் இயந்திரங்களை , வவுனியா மாவட்டச்செயலகத்துக்கு முன்பாக எ9 வீதியை வழிமறித்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த வீதியினூடான போக்குவரத்து 4 மணி நேரம் பாதிப்படைந்திருந்தமையால் குழப்பமான நிலையும் ஏற்பட்டிருந்தது. மாலை 3.30 மணியளவில் மாவட்ட செயலர் எம்.கனீபா தலைமையில் பல்வேறு தரப்பினரை உள்ளடக்கிய பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், தவிசாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள்,பொலிஸார் ஆகியோர் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றியிருந்தனர்.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர் பிரச்சினை முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதுடன்.மாலை 5மணிக்கு ஆர்ப்பாட்டமும் கைவிடப்பட்டது. கழிவுகளும் வழைமையான இடத்தில் கொட்டப்பட்டன.

குப்பை கொட்டும் பகுதியில் தற்காலிகமாக ஒரு மாதகாலம் வரை தொடர்ந்து குப்பை கொட்டுவதற்கு அனுமதிப்பதுடன் ஒருமாதத்தின் பின்பு குப்பை கொட்டும் இடத்தை அவ்விடத்திலிருந்து மாற்றுவதற்குரிய பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக முடிவுகாணப்பட்டுள்ளதாக மாவட்ட அரச செயலர் கனீபா தெரிவித்தார். நகரின் கழிவுகள் அகற்றுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த நகரசபை, பிரதேச சபையின் அநேகமான உறுப்பினர்கள் குப்பைகள் கொட்டுவதற்குத் தடை ஏற்படுத்தினால் நகரின் கழிவுகளை காலவரையன்றி அகற்ற அனுமதிக்கப் போவதில்லை எனக் காட்டமாக தெரிவித்திருந்துடன்.குறித்தமக்கள் குடியேற்றம் சிலகாலங்களுக்கு முன்னரே அத்துமீறி உருவாக்கப்பட்டது. ஆனால் இருபது வருடங்களுக்கும் மேலாக குறித்த ஒதுக்கப்பட்ட பகுதியிலேயே மாவட்டத்தின் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றது என்று விசனம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-110)

குளத்துக்கு நீர் வருகின்ற வாய்காலில் தொடர்ச்சியாக கொட்டப்படும் குப்பைகள்

பொது மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜன. 31

கிளிநொச்சிக் குளத்துக்கு நீர் வருகின்ற வாய்காலில் தொடர்சியாகக் குப்பைகள் கொட்டப்படும் நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நீர் சுத்திகரிப்புச் செய்து, குடி நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நீர் வருகின்ற வாய்காலில், தொடர்ச்சியாக குப்பைகள் கொட்டப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீர் வருகின்ற வாய்காலுக்கு அருகாமையில் உள்ளவர்கள் நாளாந்த குப்பைகளை குறித்த வாய்காலிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கொட்டி வருகின்றனர்.

இதனால் நீரின் தன்மையில் பாதிப்பு ஏற்படும் எனவும் இதனால் நோய்த் தாக்கங்கள் எவையேனும் வரலாம் என தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களுக்கு நீர் வழங்கப்படுகின்றபோது அவை தூய்மையாக்கப்பட்டு வழங்கப்பட்டாலும், இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளரிடம் கேட்டபோது: அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றமை தொடர்பாக முறைப்பாடு கிடைப்பெற்றதும், நீர்ப்பாசனத் திணைக்களத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் தொடர்ந்து அவ்வாறு காணப்படின் விரைவில் அவை தொடர்பாக ஆராயப்படும் எனத் தெரிவித்தார்.

(க-6)

அரச தலைவரின் செயலருடன் மக்கள் சந்திப்பு

முல்லைத்தீவு,ஜன.31

முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் தமது நிலத்தைக் கேட்டுப் போராடும் மக்கள் இன்று அரசதலைவரின் செயலரை நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்த ராஜா வின் ஏற்பாட்டில் சந்திக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பகுதியில் கடந்த 755 நாள்களுக்கும் மேலாக தமது பூர்விக நிலங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் நிலையில், இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கின்றனர்.

அவ்வாறு முன்வைக்கும் விடயம் தொடர்பில் கலந்துரையாடவே சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க-105)

பொகவந்தலாவ தீ விபத்தில் 12 குடியிருப்புகள் தீக்கிரை



பொகவந்தலாவ,ஜன.31

பொகவந்தலாவ வானகாடு தோட்டத்தில்நேற்றுமுன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 தொழிலாளர்களின் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 12 வீடுகள் சேதமடைந்ததுடன், இந்த வீடுகளில் குடியிருந்த 16 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் ஆண்கள் 24 பேரும், பெண்கள் 21 பேரும், சிறுவர்கள் 21 பேரும் அடங்குகின்றனர்.

வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடிவந்து தீயை அணைக்க முற்பட்ட போதும், தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. அதனையடுத்து பொகவந்தலாவ பொலிஸார், அட்டன் டிக்கோயா நகர சபை தீய்ணைப்பு படையினருடன் பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 2 மணித்தியாலயங்களுக்கு பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும், 12 வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்களும் தீக்கிரையாகியுள்ளன.

இவர்களுக்கான உதவிகளைத் தோட்ட நிர்வாகமும், நோர்வூட் பிரதேச சபையினரும், மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாகவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கும் பொகவந்தலாவ பொலிஸார், அட்டன் பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர். (க)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி கோடாவுடன் சந்தேக நபர் கைது

மன்னார்,ஜன.31

மன்னார் மடு, தட்சனாமருதமடு காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றினைக் கைப்பற்றிய வன்னிப் பிராந்திய போதை ஒழிப்புப்பிரிவினர் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன், அங்கிருந்து 187 லீற்றர் கசிப்பு உற்பத்திக்குப்பயன்படுத்தப்படும் கோடாவினையும் கசிப்பு உற்பத்திக்குப்பயன்படுத்தப்படும் சில பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அபய விக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் சிறப்பு போதை ஒழிப்புப்பிரிவினருக்குக்கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மன்னார் தட்சனாமருதமடுக் காட்டுப்பகுதியில், சட்டவிரோதமாக கசிப்பை உற்பத்தி செய்த அந்தப் பகுதியைச் சேர்ந்த 51வயதுடைய நபர் ஒருவரையும் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்டுவரும்விசாரணையின்பின்னர், நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட வுள்ளதாகவும், போதை ஒழிப்புப்பிரிவினர் தெரிவித்தனர். (க)

நானாட்டான் சிவராஜா அ.த.க.பாடசாலை பெயர்ப் பலகை திறந்து வைக்கப்பட்டது

மன்னார்,ஜன.31

நானாட்டான் பிரதேசத்தில்1958 ஆம் ஆண்டளவில் இந்த சைவ பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது ஆரம்பத்தில் சிவராஜா வித்தியாலயம் என்று அழைக்கப்பட்டுவந்தது போரின் பின் மோட்டக்கடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்று மாற்றப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இருந்த பெயர் தற்போது திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர்களும், இந்துப் பெரியோர்களும் பழைய பெயர் பாடசாலைக்கு சூட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டமைக்கு ஏதுவாக இந்த வருடம் மீண்டும் மன். சிவராஜா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்று பெயர் மாற்றம் செய்ய வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடன் மன்னார் வலய கல்வி பணிப்பாளர் ஜெனற் பிரட்லி நேற்று முன்தினம் மதியம் ஒரு மணியளவில் பாடசாலையின் பெயர் பலகையினை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் நானாட்டான் கோட்டக்கல்வி அலுவலர் ஜெகநாதன், நானாட்டான் பிரதேச செயலக கணக்காளர் திருமதி கிரிஜா, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (க-213)

துப்பாக்கி, கைக்குண்டுடன் குருநாகலில் இருவர் கைது!

கொழும்பு, ஜன.31

துப்பாக்கி மற்றும் கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் கடந்த திங்கட்கிழமை குருநாகலில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல், அஸ்வெத்தம பிரதேசத்திலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் முச்சக்கர வண்டி ஒன்று சோதனையிடப்பட்டது. அதில் துப்பாக்கி, கைக்குண்டு, 37 ஆயிரத்து 500 மில்லி லீட்டர் மதுபானம் என்பன கைப்பற்றப்பட்டன. முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 34 வயதுடையவர்கள் என்றும், தெமடகஹபாச்ச மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-71)

இணைப்பாடவிதான செயற்பாடுகளினூடாக ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கலாம்

கிளிநொச்சி, ஜன. 31

இணைப்பாடவிதான செயற்பாடுகளினூடாக ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற யாழ் மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்து உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; எமது மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் தலைசிறந்து விளங்கிய வர்கள்.

தற்போதும் தலைசிறந்து விளங்கக் கூடிய வகையில் அவர்களிடம் திறன்கள் இருக்கின்றன.

அவர்களின் திறனை மழுங்கடித்து எமது மாணவர்களையும், இளைஞர் களையும் திசை திருப்பும் முயற்சிகள் இந்த மண்ணிலே கச்சிதமாக அரங் கேறிக் கொண்டு இருக்கிறன .

இவற்றை எல்லாம் முறியடித்து நாம் கல்வியிலும், விளையாட்டிலும் சாதனை படைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு பாடசாலையின் முதல்வர் த.தமிழ்ச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது. தென்மராட்சி வலயக் கல்வி பணிமனையின் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மதிதரன், ஓய்வு பெற்ற அதிபர்களான இராயேந்திரம், சி.பவளேந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (க-6)

51 நாள் அரசு நடைமுறைப்படுத்திய

துறைமுகக் கட்டணத் திருத்தத்தை அமைச்சர் சாகல மீளமைத்துள்ளார்

கொழும்பு, ஜன. 31

இலங்கைத் துறைமுக அதிகார சபை சேவைகள் மற்றும் ஜயபாலு முனைய நிறுவன கட்டணங்களை மீளமைக்கும் பொருட்டு முன்னாள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் முன்னெடுத்த நடவடிக்கைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தீர்மானித்துள்ளார்.

துறைமுக அதிகார சபையின் உயர் அதிகாரிகள் மற்றும் துறைமுக துறையின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக நியமிக்கப்பட்ட குழுவால் இந்தக் கட்டண மீளமைப்புத் தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். துறைமுகக் கட்டணத் திருத்தம் தொடர்பிலான தீர்மானம் கடந்த நவம்பர் 5ஆம் நாள் 51 நாள்கள் அமைச்சரவை நிறைவேற்றியிருந்தது. இந்தத் தீர்மானத்துக்குத் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி துறைகளின் பிரதிநிதிகளும் தம்முடைய எதிர்ப்பை வெளியிட்டார்கள்.

இவர்களின் குற்றச்சாட்டுக்களை , எதிர்ப்புக்களைக் கவனத்திற்கொண்டு இந்தக் கட்டணத் திருத்தச் செயற்பாடுகளை எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் நாள் வரை ஒத்திவைப்பதற்கு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அனுமதியளித்தது -என்றுள்ளது. (த)

குளவிகள் கொட்டியதில் கணவன் உயிரிழந்தார்

மனைவி மருத்துவமனையில்

கொழும்பு, ஜன. 31

குளவி கொட்டுக்கு இழக்காகிய குடும்பத்தலைவர் உயிரிழந்தார். அவரது மனைவி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தச் சம்பவம் தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை சின்ன கட்டுக்கலை தோட்டப்பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

இருவரும் தமது மரக்கறித் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது மரத்தில் இருந்த குளவிக்கூடு கலைந்ததால் அவற்றிலிருந்த குளவிகள் இவர்களைக் கொட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குளவி கொட்டியதில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பத்தலைவர் லிந்துலை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை சின்னக் கட்டுக்கலை தோட்டத்தைச் சேர்ந்த பழனியாண்டி சுப்பிரமணியம் (வயது - 72) என்பவரே உயிரிழந்தார். சடலம் நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. தலவாக்கலை பொலிஸார் விசாரணை நடத்தினர். (த)

கூட்டமைப்பு அமைச்சுப் பதவி பெற்று உறவுகளின் தியாகத்தைக் கெடுக்காது

யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

செங்கலடி, ஜன. 31

தமிழினம் இழந்த உரிமையைப் பெற்று அதிகாரத்துடன் தேசிய இனமாக சுய நிர்ணய உரிமையுடனும் வாழவேண்டும். எமது உறவுகள் பல தியாகங்களைச் செய்தார்கள். இந்தத் தியாகங்கள் கார்பட் வீதி அமைக்கவும் கட்டடங்களை அமைக்கவும் அபிவிருத்தி காகவும் அல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடி விவேகானந்தா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைச்சு பதவிகளை ஏற்காதது ஏன்? என்று மக்கள் எங்களிடம் கேள்வியெழுப்புகிறார்கள். தமிழினம் இழந்த உரிமையைப் பெற்று அதிகாரத்துடன் இந்த நாட்டின் தேசிய இனம் என்ற ரீதியில் சுய நிர்ணய உரிமையுடனும் வாழவேண்டும் என்பதற்காக எமது உறவுகள் பல தியாகங்களைச் செய்தார்கள். அமைச்சுப் பதவிகளை எடுப்பதன் மூலமாக அந்தத் தியாகத்தை நாம் கொச்சைப்படுத்த முடியாது.

நாங்கள் அமைச்சுப் பதவிகளைப் பெறாவிட்டாலும் இந்த அரசிலிருந்து பெறக்கூடியவற்றைப் பெற்று எமது மக்களுக்கான அபிவிருத்திகளைச் செய்வோம். தேசிய அரசு அமைவதை நாங்கள் எதிர்க்கவில்லை. மக்கள் ஆணைபெற்ற குழுவிடம் ஆட்சி வழங்கப்படுவதற்காக முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெற வேண்டும்.

இந்த நாட்டை தொடர்ந்தும் தாங்கள்தான் ஆளவேண்டும் என்ற பேராசையில் ராஜபக்ச குடும்பம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் மற்றுமொரு குழு தற்போதைய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவையே மீண்டும் அரசதலைவர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று முயற்சிக்கிறது - என்றார். (த)

பொதுமக்கள் சந்திப்பை ஆளுநர் முற்கூட்டி அறிவிக்க வேண்டும்

அலைச்சலைத் தவிர்க்க மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 31

ஆளுநருடனான பொது மக்கள் சந்திப்பு ஆளுநர் அலுவலகம் தவிர்ந்த வேறு இடங்களில் நடைபெற்றால் அதனை முற்கூட்டியே பொது மக்கள் அறிந்து கொள்ளும்படி அறிவித்தல் வழங்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட பின்னர் பொதுமக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார். பொது மக்கள் சந்திப்பு நாளாக புதன்கிழமை காணப்படுகிறது. இது வழமையாக ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறும். மாகாணத்தில் உள்ள அனைத்து அமைச்சு, திணைக்கள அதிகாரிகளையும் ஒன்றிணைத்து பொதுமக்கள் சந்திப்பு கடந்தவாரம் தொடக்கம் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சரின் அமைச்சுச் செயலகத்தில் நடைபெற்று வருகிறது. நேற்றும் மக்கள் சந்திப்பு கைதடியில் நடைபெற்றது. ஆனால் அது தொடர்பான ஊடக அறிக்கையும் சந்திப்புக்கு முதல் நாளே அனுப்பி வைக்கப்பட்டது. அது தொடர்பான செய்தி மக்கள் சந்திப்பு நடைபெறும் நாளிலேயே பத்திரிகைகளில் வெளியாகின்றன.

வெளிமாவட்டங்களில் இருந்து வருவோர் கைதடியில் பொது மக்கள் சந்திப்பு நடைபெறுவது தெரியாமல் அலைக்கழிந்த சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

ஆசிரியர் நியமனம் தொடர்பில் கல்வி அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு நேற்றுக் காலை வெளிமாவட்டத்திலிருந்து வந்த ஆசிரியர்கள் அமைச்சுக்கு சென்றுள்ளனர். ஆனால் அமைச்சின் அலுவலர்கள் ஆளுநரின் மக்கள் சந்திப்புக்காக கைதடியில் இருந்துள்ளனர். ஆகவே இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாமல் இருப்பதற்கு ஆளுநருடான மக்கள் சந்திப்பை முற்கூட்டியே அறியத்தருமாறு மக்கள் கேட்டு கொண்டுள்ளனர்.

வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் "பொதுமக்கள் தினம்" வடக்கு மாகாண சபை அமைச்சுக்களின் செயலர்கள், திணைக்களங்களின் தலைவர்களின் நேரடிப் பங்குபற்றலுடன் நேற்று கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சரின் அமைச்சுச் செயலகத்தில் இடம்பெற்றது. (த-7)

யாழ்ப்பாணம் மாநகர மேயருடன் தென்னாபிரிக்கத் தூதுவர் சந்திப்பு

தென்மராட்சி, ஜன.31

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட்டுக்கும், இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் ரொபினா பி மார்க்ஸுக்கும் இடையே நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது.

தென்னாபிரிக்காவின் சுதந்திரதினவிழாவைஇந்தமுறை யாழ்ப்பாணத்தில் முன்னெடுப்பது தொடர்பாகவும், அந்த நிகழ்வில் 200 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள் வழங்குவது தொடர்பாகவும் அந்தச் சந்திப்பில் பேசப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய அரசியல் மாற்றம் தொடர்பாகவும், அதன் சாதக பாதகங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளைத் தூதுவர், யாழ்ப்பாணம் மாநகர முதல்வரிடம் கேட்டிருந்தார் என்றும், முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க முதல்வர் இணக்கம் தெரிவித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-105)

உத்தரதேவி தொடருந்து கட்டண விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

கொழும்பு - காங்கேசன்துறை இடையிலான உத்தர தேவி தொடருந்து சேவையின் பயணக் கட்டண விவரம் வெளியிடப்பட்டுள்ளது. முதலாம் வகுப்பு (குளிரூட்டப்பட்டது) கட்டணமாக ஆயிரத்து 700 ரூபாவும், இரண்டாம் வகுப்புக் கட்டணமாக 850 ரூபாவும், மூன்றாம் வகுப்புக் கட்டணமாக 600 ரூபாவும் அறவிடப்படவுள்ளன.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 11.50 மணிக்குத் தொடருந்து புறப்படும். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி காலை 6.10 மணிக்கும் புறப்படும். (ஒ.5,8)

பல்கலைக்கு விண்ணப்பிப்பது பற்றிய வழிப்படுத்தல் மாணவருக்குப் போதாது

கல்வித்துறை கவனிக்க வேண்டுமெனக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 31

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களை வழிப்படுத்தும் விடயத்தில் பாடசாலை நிர்வாகங்கள் பாராமுகமாகவுள்ளன.

மாணவர் பாடநெறிகளை உரிய முறையில் தெரிவு செய்வதிலும் இணைய வழியாகப் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தை நிரப்புவதிலும் இணைய வழியாகப் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதிலும் இடர்படுகின்றனர் எனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

சில விடயங்களில் சிலர் கட்டணங்களை அறவீடு செய்து கொண்டும் பல்கலைக்கழக அனுமதிக்கான படிவங்களை நிரப்பிக் கொடுக்கின்றனர்.

மாணவர் பல மணி நேரம் நாள்கணக்கில் காத்திருந்தே விண்ணப்பங்களை நிரப்புகின்றனர். பல்கலைக்கழக அனுமதிக்கான முதலாவது விண்ணப்பத்தைப் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழு தகுதி அடைந்த மாணவர்களிடம் கோரியுள்ளது. மாணவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய பாடநெறி அதற்குரிய பல்கலைக்கழகம் தொடர்பான விவரம் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் குறித்த துறை சார்ந்தவர்களுக்கே தெளிவாகத் தெரியும். அவர்கள் வழிப்படுத்துமிடத்துதவறுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். குறித்தமாணவன், மாணவி பெற்றுக்கொண்ட 'இசற்புள்ளிக்கு' பொருத்தமான பாடநெறியை, பல்கலைக்கழகத்தை விண்ணப்பத்தில் திருத்தமான முறையில் குறிப்பிட்டுதமது விருப்பத்தைத் தெரிவிக்காத இடத்துபல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

இந்தவிடயத்தில் பாடசாலை நிர்வாகம் மற்றும் ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் கற்று நேரிய மாணவர் விடயத்தில் கூட பாராமுகமாகவுள்ளனர். இந்த விடயத்தில் வலயக்கல்வித்திணைக்களமோ மாகாணக் கல்வித் திணைக்களமோ பொருத்தமான வழிப்படுத்தல்களை உரிய வேளையில் வழங்காமல் உள்ளன.

இதனால் பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியாத ஏது நிலை ஏற்பட்டு விடுவதாகவும் பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. (த-11)

குடிதண்ணீர் தாங்கி சுத்தம் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் தொல்புரம் மத்தி சனசமூக நிலையத்தில் பொதுமக்கள் பாவனைக்காக அமைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர்த் தாங்கி சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

குடி தண்ணீர்த் தாங்கிக்கு மேல் இருந்த ஆல மரகிளைகளின் இலைகளினால் தண்ணீர் மாசடைந்த நிலையில் காணப்பட்டது. வலி. மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் ச.ஜெயந்தினியிடம்விடுத்தகோரிக்கைக்கு அமைவாகநேற்று முன்தினம் சித்தன்கேணி மின்சாரசபையின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட்டது.(ஐ-63)

தளபாடங்கள் வழங்கல்

சுதுமலை வடக்கு தெற்கு கமக்கார அமைப்பு, சுதுமலை வடக்கு ஞான வைரவர் ஆலயம், நாவலர் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு பெறுமதியான தளபாடங்கள் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டன.

முன்னாள் விவசாயப் பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)

மின்விநியோகத்துக்காக

பனை, தென்னை மரங்கள் அதிகளவில் தறிக்கப்படுகின்றன

மன்னார் மக்கள் குற்றச்சாட்டு

மன்னார், ஜன. 31

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சௌத்பார் சாந்திபுரம் ஊடாக மின் விநியோகத்துக்காக உயரமான மின்கம்பங்கள் நடப்படுகின்றன.

இதற்காக அந்தப் பகுதியில் உள்ள பயன்தரு தென்னை மரங்கள் மற்றும் பனைமரங்கள் இலங்கை மின்சார சபையால் வெட்டப்படுகின்றன என்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வட பிராந்திய மின்சார சபையால் மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சாந்திபுரம் கிராமத்தின் ஊடாக அதி உயர் மின் கம்பங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் வீட்டுக் காணியில் காணப்படும் மின்கம்பங்களின் உயரத்துக்கு மேலாக வளர்ந்துள்ள தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்ட வேண்டும் என்று மின்சார சபை பொறியியலாளரினால் மக்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

வீட்டின் உரிமையாளர்கள் தென்னை மரங்களை வெட்டி அகற்றாது விட்டால் இலங்கை மின்சார சபைப் பணியாளர்கள் அதனை அகற்றுவார்கள் என்று கூறியிருந்தார். கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் சாந்திபுரம் கிராமத்துக்குச் சென்று சில வீடுகளில் பலவந்தமாகத் தென்னை மரங்களை வெட்டமுற்பட்டபோதும், மேலும் பல வீடுகளில் உள்ள தென்னை மரங்களை வெட்டிய போது மக்கள் எதிர்ப்புக் காரணமாகப் பணியைத் தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்தனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதி மக்களின் வீடுகளில் அடையாளப்படுத்தப்பட்ட அனைத்து மரங்களும் மின்சார சபை ஊழியர்களால் வெட்டப்பட்டுள்ளன.

எதிர்ப்புத் தெரிவித்த மக்களின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாப்படும் என்று தெரிவித்ததை அடுத்து மக்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

வெட்டப்பட்ட மரங்களுக்கான இழப்பீடுகளைக் கோரியபோதும் இலங்கை மின்சார சபை வழங்கவில்லை என்று மக்கள் குற்றம் சுமத்தினர். (ஒ.5,56)

மன்னாரில் 16 ஏக்கர் விடுவிப்பு 44 ஏக்கர் விரைவில் கையளிப்பு

மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார், ஜன. 31

மன்னார் மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 16 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டமைக்கான உத்தியோகபூர்வ ஆவணம் இராணுவத்தினரால் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது. மேலும், பேசாலையில் 11 ஏக்கர், கூராயில் 26 ஏக்கர், ஜீவ நகரில் 5.6 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என்று இராணுவத்தினர் உறுதியளித்துள்ளதாக மாவட்டச் செயலர் சி.ஏ. மோகன்றாஸ் தெரிவித்தார்.

மன்னார், தள்ளாடி இராணுவத்தின் 54ஆவது படைப் பிரிவு மற்றும் இராணுவத்தின் 61 ஆவது படைப்பிரிவு ஆகியவற்றின் கீழ் இருந்த 16 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தன.

அதற்கான ஆவணங்களை, 54ஆவதுபடைப் பிரிவு பிரிகேடியர் சேனாரட்ன பண்டார மற்றும் இராணுவத்தின் 61 ஆவது படைப் பிரிவு அதிகாரி ஜேம தில்கரட்ன ஆகியோர் ஆவணங்களை மாவட்டச் செயலரிடம் கையளித்தனர்.

ஆவணங்கள் கையளிக்கப்பட்ட 16 ஏக்கருக்கு உட்பட்ட காயா நகர் காணி காடாக உள்ளமையால் வனவளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஆவணங்கள் மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதே வேளை, 54ஆவது படைப் பிரிவுக்கு உட்பட்ட பேசாலையில் 11 ஏக்கர், கூராயில் 26 ஏக்கர், ஜீவ நகரில் 5.6 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்ததாக மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ஒ.5,56)



பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவேண்டும்

அமைச்சர் சாகல தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31

பாடசாலைக்கல்வியை அபிவிருத்திசெய்யும்பொழுது கிராமத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

மாத்தளை, முகுறுமுல்ல இடைநிலை வித்தியாலயத்தில் அண்மையில் நடைப்பெற்ற இல்லமெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும்தெரிவித்ததாவது:

சிறுபாடசாலைகளை அபிவிருத்திச்செய்தால்மாத்திரமே கல்வித் துறையை அபிவிருத்தியடைந்த நாடுகளில் அருகிலுள்ளபாடசாலைகளிலேயேபிள்ளைகள்சேர்க்கப்படுகின்றார்கள். அங்கே பெரியபாடசாலைகள், சிறியபாடசாலைகளென்ற பாகுபாடு இல்லை. இவ்வாறான தோர் நிலை இந்த நாட்டில் முன்புகாணப்பட்டது. பிற்காலத்தில் புகழ்பெற்ற பாடசாலைகள் எனும்நாடகம் சமூகத்தில் அரங்கேறத் தொடங்கியது. சிறுபாடசாலைகளை அபிவிருத்தி செய்தால் மாத்திரமே கல்வித் துறையை அபிவிருத்தி செய்தோமென்று எம்மால் கூறமுடியும்.

சிறுகிராமத்துபாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அண்மையிலுள்ள பாடசாலையை சிறந்தபாடசாலையாகமாற்றியமைக்க வேண்டும். இந்த நிலை ஏற்பட்டால் பிரபல்யமான பாடசாலைகளில் பிள்ளைகளைச்சேர்க்கும்பொருட்டு முகங்கொடுக்க நேரிடுகின்ற அழுத்தங்கள் மற்றும் பிள்ளைகளை அனுமதிக்க இயலாத பெற்றோர் மற்றும் பிள்ளைகள் முகங்கொடுக்க நேரிடுகின்ற மனவருத்தமும் இல்லாதுபோகும். கிராமத்திலுள்ள பிள்ளைக்கும் தரமான கல்வியை பெற்றுக்கொள்ள இயலும் - என்றார். (த)

சகோதரர்களுக்கு இடையில் வாள்வெட்டு

ஒருவர்படுகாயம்

ஹற்றன்.ஜன.31

சகோதரர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாள்வெட்டுச்சம்பவத்தில்பலத்த காயமடைந்தசகோதரர்ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பொகவந்தலாவ பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பெற்றெளசோ பிரிட்லேன்ட்தோட்டப் பகுதியில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்றது. காயமடைந்தவர் பொகவந்தலாவமருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிழங்கன் ஆதாரமருத்துவமனைக்கு மாற்றபட்டுள்ளார்.

சம்பவம்தொடர்பில்மற்றைய சகோதரர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவபொலிஸார்தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, சகோதரர்கள் இருவருக்கும் இடையில் தகராறுகாரணமாகஏற்பட்ட மோதலில் பலத்த காயங்களுக்கு உள்ளான சகோதரர் வாள் ஒன்றை எடுத்து மற்றைய சகோதரருடைய தலைபகுதியில்தாக்கியதாகவும் ஆத்திரமடைந்த சகோதரர்குறித்தவாளைப்பிடிங்கி கடுமையாகவெட்டியுள்ளார் என்றும் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கைது செய்யபட்ட சந்தேகநபரிடம் விசாரனைகளை மேற்கொண்டு வருவதோடு ஹற்றன் நீதிவான்முன்னிலையில்முன்னிலைப்படுத்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப்பொகவந்தலாவபொலிஸார்தெரிவித்தனர். (ஜ)

கட்சி நீக்கத்தை எதிர்த்து வியாழேந்திரன் வழக்கு

யாழ்ப்பாணம். ஜன. 31

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு எதிராகவும், புளொட் அமைப்பிலிருந்து தன்னை நீக்கியமைக்கு எதிராகவும் நாடாளுமன்றஉறுப்பினர்வியாழேந்திரன் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். புளொட் அமைப்பு உறுப்பினரான வியாழேந்திரன், 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ்அரசுக்கட்சியின்வீட்டுச் சின்னத்தில் மட்டக்களப்புமாவட்டத்தில்போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் குழப்பத்தின்போது, மகிந்தராஜபக்ச அணிக்குத் தாவி பிரதி அமைச்சுப்பதவியைஏற்றிருந்தார்.

இதனையடுத்து புளொட் அமைப்பு அவரை நீக்குவதாக அறிவித்திருந்தது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச்செயற்குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது வியாழேந்திரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்தவழக்கு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதிவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஒ.5,105)

புதிய கூட்டுஒப்பந்தம் மீண்டும் தொழிலாளரை ஏமாற்றிவிட்டது

அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

நுவரெலியா, ஜன. 31

கூட்டுஒப்பந்தம்மீண்டும்தொழிலாளர்களைஏமாற்றிவிட்டது. பல போராட்டங்களின் பின்பு குறைந்த தொகையே சம்பள அதிகரிப்பாககிடைத்திருக்கின்றது. இந்தக்கூட்டுஒப்பந்தத்தை மலையகமக்கள்முன்னணிஏற்றுக்கொள்ளவில்லைஎன்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக்கூட்டணியின்பிரதித்தலைவரும்சிறப்புபகுதிகளுக்கான அபிவிருத்தி அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக ஆராயும் மலையக் மக்கள் முன்னணியின் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இரவு நுவரெலியாவில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார், மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் ஏ. லோரன்ஸ் உள்ளீட்ட பலர் கலந்து கொண்டனர்.

அதன்போது இராதாகிருஸ்ணன் மேலும்தெரிவித்ததாவது:

கூட்ட ஒப்பந்தத்தில் ஏற்கனவே வரையறைசெய்யப்பட்டதன்படி உற்பத்தித் திறன்படி கொடுப்பனவு 140 ரூபாவும் வரவுக்கானகொடுப்பனவு60ரூபாவும்இல்லாதுசெய்யப்பட்டுள்ளது. கூட்டு ஒப்பந்தத்தில் வெறுமனே சம்பள உயர்வு மாத்திரமே பேசப்பட்டுள்ளது. ஒரு தோட்டத் தொழிலாளி இறந்தால் அதற்கானகொடுப்பனவாக 2000ரூபாமட்டுமேவழங்கப்படுகின்றது. வருடத்துக்கான ஊக்குவிப்பு போனஸ் 750 ரூபா வழங்கப்படுகின்றது. இவைபோதுமானதாக இல்லை.

இந்தக் கொடுப்பனவுகள் கடந்த பல வருடங்களுக்கு முன் பாகத்தீர்மானிக்கப்பட்டவை. இவைஇன்றையகாலத்துக்கு ஏற்றாற் போல மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (த)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் குறைத்தமை வரலாற்றுத் துரோகம்!

ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஜன. 31

தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் கடந்த மூன்று மாதங்களாக இடம்பெற்று வந்த இழுத்தடிப்புகளுக்கும்போராட்டங்களுக்கும்மத்தியில், ஆயிரம்ரூபா கோரிக்கைபுறந்தள்ளப்பட்டு700ரூபாஅடிப்படைச்சம்பள உடன்பாடுமேற்கொள்ளப்பட்டுள்ளமை, மீண்டும்தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் வரலாற்றுத் துரோகம் என்று புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்தமுன்றுவருடங்களாகஆயிரம்ரூபாசம்பளக்கோரிக்கையைமுன்னிறுத்திபல்வேறுஅரசியல்கபடநாடகங்கள் அரங்கேற்றப்பட்டு வந்தன. கடந்த மூன்று மாதங்களில் தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையான ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்படவேண்டுமென்று கோரி பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றுவந்தன. தோட்டத்தொழிலாளர்களின்போராட்டம் தேசியபோராட்டமாகஎழுச்சிபெற்றுவந்தநிலையிலேயே அந்தப் போராட்டங்களை மலினப்படுத்தும் வகையிலும் தொழிலாளர்களின்உணர்வுகளைக்கொச்சைப்படுத்தும் வகையிலும் எட்டப்படிருக்கும் உடன்பாட்டை முற்றாக நிராகரிக்கவேண்டும்.

தோட்டத்தொழிலாளர்களின்உணர்வுகளுக்குமதிப்பளிக்காத,நாட்டில்இருந்துவரும்அடிப்படைச்சம்பளக்கொள்கை வாழ்க்கைச் செலவுக்குப் போதுமானதல்ல. தோட்டத் தொழிலாளர்கள்தொடர்ந்தும்போராடமுன்வரவேண்டும் என்றுள்ளது. (த)

மலையகத்தில் 3ஆவது நாளாகப் போராட்டம்

700 ரூபா சம்பள அதிகரிப்பை நிராகரித்து

பொகவந்தலாவ, ஜன. 31

700 ரூபா அடிப்படைச் சம்பளத்துக்குக் கைச்சாத்திட்ட தொழிற்சங்கங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தோட்டத் தொழிலாளர்கள் உருவப்பொம்மையைச் சவப்பெட்டியாக ஏந்தி பொகவந்தலாவையில் நேற்றுமுன்தினம் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பொகவந்தலாவகொட்டியாகலைதோட்டமக்கள்நேற்றுமுன்தினம்இந்தஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.

கொட்டியாகலை தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து உருவப்பொம்மையைச்சவப்பெட்டியாக ஏந்தி பேரணியாக பொகவந்தலாவ செலவகந்த சந்திவரை சென்றுநகரப்பகுதியில் கூட்டு ஒப்பந்தத்தில் சைச்சாத்திட்ட பிரதானிகளின் உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டன. தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெற்றுத் தருவதாகக் கூறிய இ. தொ. கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவர் ஆயிரம் ரூபா பெற்றுத் தருகிறார்களோ அவர்களுக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறி கட்சித் தாவலில் ஈடுபட்டு பெருந்தோட்டக் கைத் தொழில் இராஜாங்க அமைச்சரான வடிவேல் சுரேஸ் ஆகிய இருவரும் ஒட்டுமொத்த தோட்டத் தொழிலாளர்களையும் கம்பனிக் காரர்கள் வழங்கிய பெட்டியை பெற்றுக் கொண்டு தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். இவர்களுக்குஅடுத்த தேர்தலில்தக்கபாடம்புகட்டுவோம்என்று ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டமக்கள்தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். புதிய கூட்டு ஒப்பந்தம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (த)



வலி. தென்மேற்கு பிரதேசத்தில் பெயர்ப் பலகைகள் நடப்படவுள்ளன

வலி.தென்மேற்கு, ஜன 31

மக்களின் நலன் கருதி தேசிய நல்லிணக்க அமைச்சர் மனோகணேசன் வழங்கிய நிதியுதவியில் வலி தென்மேற்கு பிரதேசத்தில் வீதிகள்,மயானங்கள்,சந்தைகள் ஆகியவற்றுக்கு பெயர்ப்பலகைகள் நடப்படவுள்ளன.

முதற்கட்டமாக 125 வீதிகளுக்குப் பெயர்ப்பலகைகள் நடப்படவுள்ளமையால் வீதிகளின் விவரங்களைத் தெரியப்புடுத்துமாறு தவிசாளர், உறுப்பினர்களைக் கோரியுள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 600 இற்கும் மேற்பட்ட வீதிகளும் 14 மயானங்களும், 9 சந்தைகளும் உள்ளன. இவ்வீதிகளில் 120 க்கு ஏற்கனவே 2017 ஆம் ஆண்டு ரூபா 10 லட்சம் செலவில் பெயர்ப்பலகைகள் நடப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வீதிகளுக்கும், மயானங்களுக்கும், சந்தைகளுக்கும் பெயர்ப்பலகை சூட்ட முன்வந்துள்ள தவிசாளர் அ.ஜெபநேசன் ,தேசிய நல்லிணக்க அமைச்சர் மனோகணேசனின் உதவியை நாடியதைத் தொடர்ந்து அமைச்சர் ரூபா 25 லட்சம் வழங்கியுள்ளார்.

இந்த நிதியிலிருந்து முதல் கட்டமாக 125 வீதிகளுக்கு பெயர்ப்பலகைகள் நடப்படவுள்ளன.

28 கிராம அலுவலகர் பிரிவுகளைக் கொண்ட 17 வட்டாரங்களுக்கு வாக்குகளின் அடிப்படையில் 16 உறுப்பினர்களும் விகிதாசார முறையில் 12 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.ஒரு வட்டாரத்துக்கு 5 வீதிகள் என்ற வீதம் 17 வட்டாரங்களிலுள்ள வீதிகளுக்குப் பெயர் சூட்டப்படவுள்ளமையால் வீதிகளின் விவரங்களை அறியத்தருமாறு தவிசாளர் உறுப்பினர்களைக் கோரியுள்ளார். (ஜ-115)

போதை ஒழிப்பு கவனவீர்ப்புப் பேரணி

யாழ்ப்பாணம்,ஜன.31

போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு புங்குடுதீவிலுள்ள பாடசாலை மாணவர்களினால் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

"போதையை ஒழிப்போம், தீவகத்திலுள்ள ஒரேயொருமதுபானவிற்பனைநிலையமாகிய புங்குடுதீவுமதுபானசாலையைஅகற்றுவோம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

கணேசாமகாவித்தியாலயம், சித்திவிநாயகர் வித்தியாலயம், அமெரிக்க மிஷன் ஆரம்ப பாடசாலை,றோமன்கத்தோலிக்க ஆரம்பபாடசாலை, சுப்பிரமணியம்மகளிர்வித்தியாலயம், புங்குடுதீவு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மேற்படி கவனவீர்ப்பு நிகழ்வை முன்னெடுத்திருந்தனர்.

இந்தக் கவனவீர்ப்பு நடை பவனியானது புங்குடுதீவுகிழக்கு கணேசாமகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுப்புங்குடுதீவு மேற்கு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்தில் நிறைவுற்றது.

ஊர்காவற்துறை தலைமைப் பொலிஸ் நிலையம் மற்றும் புங்குடுதீவு உலக மையத்தின் அனுசரணையோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியில் புங்குடுதீவு கத்தோலிக்க பங்குத்தந்தை செபஜீவன் அடிகளார் , ஊர்காவற்துறைதலைமைப்பொலிஸ்பொறுப்பதிகாரி விகும் வீரசேகர , குறிகாட்டுவான் பொலிஸ் காவலரண் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் கலப்பான, மண்டைதீவுபொலிஸ் காவலரண் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ் பரிசோதகர் விவேகானந்தராஜ் , புங்குடுதீவு உலக மைய தலைவர் பிள்ளைநாயகம் சதீஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ)





தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மேற்கு வாசல் குடமுழுக்கு நேற்று நடைபெற்றது. இதில் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோகணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ம-26)

நுளம்பு கட்டுப்பாட்டு சோதனை 1,901 வீடுகளில் இடம்பெற்றது

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் இரண்டு நாள்கள் இடம் பெற்ற நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது ஆயிரத்து 901 வீடுகள் சோதனையிடப்பட்டன.



இதில் 24 வீட்டுச் சுற்றாடல்களில் நுளம்புக் குடம்பிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என்று மாநகர சுகாதார பிரிவு தெரிவித்தது.

கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை வண்ணார்பண்ணையில் 471 வீடுகளும் நாவாந்துறையில் 491 வீடுகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரியாலையில் 209 வீடுகளும் நல்லூரில் 168 வீடுகளும் யாழ்ப்பாண நகரில் 562 வீடுகளும் சோதனையிடப்பட்டன. இந்த இரண்டு நாள் சோதனையின்போது சுற்றாடல்கள் துப்புரவு இன்றி காணப்பட்ட 331 வீடுகளுக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்கள் ஒருவார காலத்துக்குள்தமதுசுற்றாடல்களை துப்புரவு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-17)

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் வீதிகள் உரியமுறையில் அமைக்கப்படவில்லை

வடமராட்சி,ஜன.31

வடமராட்சிகிழக்கு, மாமுனை தொடக்கம் போக்கரப்பு வரைக்குமானகிராமங்களில் துரித கிராம அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும், வீதிகள் உரிய முறையில் அமைக்கப்படவில்லையெனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடார்பாக மேலும் தெரியவருவது வடமராட்சி கிழக்கின் மாமுனை தொடக்கம் போக்கரப்பு வரைக்குமான கிராமங்களில் வீதிகள் இல்லாமல் மணல் ஒழுங்கையாகவும், வீதிகள் இருக்கும் இடங்களும் களிமணலினாலான வீதியாகவும், அவையும் பல வருடங்களுக்கு முன் போடப்பட்ட வீதிகளாகவும் காணப்படுவதனால் , அவை இடிபாடுகள் நிறைந்தகுன்றும் குழியுமானவையாகவே அனேகமான வீதிகள் காணப்படுகின்றன.

அவ்வாறான வீதிகளையும் மணல்ஒழுங்கையாகஉள்ள இடங்களையும், கொஞ்சம் கொஞ்சமாக கிரவல் மணலினாலான வீதியாக மாற்ற, கம்பரலியத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டு, வீதிவேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் ஒவ்வொரு வீதிக்கும் குறித்த அரச நிறுவனத்தின் தொழில் நுட்ப அலுவலரால்போடப்பட்ட அளவுகளுக்கேற்ப வீதிகள் அமைக்கப்படவில்லை என, மக்கள் தெரிவித்தனர். அகலம் குறைவாகவும் தடிப்பு குறைவாகவும் போதுமான நீர் ஊற்றப்பட்டு உருளை போடப்படவில்லையெனவும் மக்கள் குறைபடுகின்றனர்.

வீதிகளுடன் தொடர்புள்ள அதிகாரிகள் வேலைகள் இடம் பெறுகின்றபோது நேரில்வந்து பார்வையிடுவதில்லையெனவும் தெரிவிக்கின்றனர். (சு-70)

சுகாதாரப் பரிசோதகர் எனப் போலியாக நடித்த இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 31

சுகாதாரப் பரிசோதகர் என்று போலி அடையாள அட்டையைத் தயாரித்து பணியாற்றி வந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்களில் காலாவதியான உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர மற்றும் நல்லூர் பொதுச் சுகாதார பணிமனைகளுக்கு குறித்த இளைஞர் அறிவித்துள்ளார். அந்தத் தகவலை ஏற்றுப் பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இளைஞர் பொதுச் சுகாதாரப் பரிசோதர் சேவைக்கான போலி அடையாள அட்டையைத் தனது பெயரில் தயாரித்து வியாபார நிலையங்களுக்குச் சென்று காலாவதியான மற்றும் சுகாதார சீர்கேடான உணவுப் பண்டங்களை அழித்துள்ளான் என்று வியாபார நிலைய உரிமையாளர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பில் விசாரணைக்கு அழைத்த போதும் இளைஞன் செல்லவில்லை. அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். அழைப்பாணை அனுப்பப்பட்டது. இளைஞன் நீதிமன்றில் முன்னிலையாகத் தவறியதால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பிடியாணை உத்தரவை நிறைவேற்றிய பொலிஸார், இளைஞனைக் கைது செய்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்படுத்தினர்.

சந்தேநபர் சார்பில் சட்டத்தரணிகள் யாரும் மன்றில் முன்னிலையாகவில்லை. சந்தேகநபரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஒ,5,37)

பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.31

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடராஜா சண்முகவேல் தலைமையில் நடைபெறும். (ஜ)

கூட்டுறவுப் பணியாளர்களின் விடுமுறை நாள்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இந்த ஆண்டுக்கான விடுமுறை நாள்களைக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கூட்டத்தின் தீர்மானத்தக்கு அமைய இந்த விடுமுறை நாள் சகல கூட்டுறவாளர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தைப்பொங்கல், தேசிய தினம், தமிழ் சிங்கள புதுவருடத்துக்கு முதல் நாள், தமிழ் சிங்களப் புதுவருடம், மேதினம், வெசாக், பூரணை தினத்துக்கு மறுதினம், நபிகள் நாயகம்பிறந்ததினம், நோன்புப் பெருநாள், நத்தார் தினம், சிவராத்திரி, ஹஜ் பெருநாள், தீபாவளி, பெரியவெள்ளி, கூட்டுறவாளர் தினம் ஆகிய நாள்களில் விடுமுறை வழங்கப்படவுள்ளன. (ஜ-17)

பனிக்கன்குளம் அ.த.கலவன் பாடசாலை செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டி

முல்லைத்தீவு.ஜன.31

முல்லைத்தீவு பனிக்கன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் கலைமகள் முன்பள்ளியின் ஆண்டு இல்ல செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப்போட்டிகள்நேற்றுமுன்தினம்நடைபெற்றன.

பாடசாலைஅதிபர்தா.தயாபரன் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிநிகழ்வில்முதன்மை விருந்தினராக வன்னிமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந், துணுக்காய் வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப் பாளர் என்.ராஜன் மற்றும் அயல்பாடாசலைஅதிபர்கள் ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-ரி3)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு இதுவரை பண உதவி இல்லை

கிளிநொச்சி, ஜன. 31

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா பணம் தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் மக்கள் இடம்பெயர்ந்தனர். அதனையடுத்து கொழும்பு அரசின் அமைச்சர்கள், முதன்மை அமைச்சர், சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் மாவட்டத்துக்கு வருகை தந்து பல்வேறு உதவித் திட்டங்களை வழங்குவதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபா பணம் வழங்குவதாகவும் தெரிவித்துச் சென்றனர். ஆனால் இதுவரை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதற்கட்டக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

தலைமை அமைச்சர் கிளிநொச்சிக்கு வருகை தந்தபோது, டிசம்பர் மாதம் 31 ஆம்திகதிக்கு முன்னர் பாதிக்கப்பட்டமக்களுக்கு, முதற் கட்ட நிதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டநிலையில், உதவிகள் வழங்கப்படவில்லை.

இதுதொடர்பாககிளிநொச்சிமாவட்டச்செயலரிடம்கேட்டபோது, தற்போதுகொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏனையவர்களுக்குவழங்குவதற்கானநிதிக்குகோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. அதற்கானநிதிகிடைத்தவுடன்வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (க-6)

கரிற்றாஸ் வாழ்வுதயத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு

மன்னார்,ஜன.31

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஒரு பிரிவாகிய உதவிக்கரப் பிரிவு உதயமாகி 20 ஆண்டுகள் நிறைவுறுவதையொட்டி உதவிக்கரப் பிரிவினால் இன்று சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வு கறிற்றாஸ் வாழ்வு தயஇயக்குநர்அருட்தந்தை செ. அன்ரன் அடிகளாரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணியளவில் மன்னார்வாழ்வுதயப்பணியகத்திலிருந்து விழிப்புணர்வு நடை பவனி ஆரம்பமாகி, மன்னார் பிரதான நகர் ஊடாக இல 9, வயல் வீதியிலுள்ள உதவிக்கரம் நிலையத்தில் நிறைவடையும். இதனைத்தொடர்ந்து உதவிக்கரம் நிலையத்தில் நிகழ்வுகள் நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

மன்னார் மனித எலும்புக்கூடுகளின் பரிசோதனை அறிக்கை 2 வாரத்தில் வரும்

சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த தெரிவிப்பு

மன்னார்,ஜன.31

மன்னார் மனிதப்புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகளை,அமெரிக்காவுக்கு அனுப்பி, கார்பன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாதிரிகளின் பரிசோதனை அறிக்கை இரு வாரங்களில் வெளி வரும் என அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட மருத்துவஅதிகாரிசமிந்தராஜபக்ஸதெரிவித்தார்.

மன்னார் மனிதப் புதைகுழியில் அகழ்வு பணி நேற்று புதன்கிழமை 135 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது ட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஸ ஊடகங்களுக்குக்கருத்துதெரிவிக்கையில்:

கடந்த 22 ஆம் திகதி நிறுத்தப்பட்ட அகழ்வுப் பணிகள் நேற்றைய தினம் வழமைபோல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த வளாகத்தில் இருந்து 300 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவற்றில் 294 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு 6 பொதிகள் செய்யப்பட்டுகடந்த 23 ஆம் திகதி கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டன. மறுநாள் 24 ஆம்திகதிவிமானம் மூலம் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு புளோரிடாவில் உள்ள கூடத்துக்கு கார்பன்பரிசோதனைக்காககையளிக்கப்பட்டன. என்னுடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக இரு சட்டத்தரணிகளும், காணாமல்ஆக்கப்பட்டஅலுவலகப்பணிப்பாளர்ஒருவரும்வருகைதந்திருந்தனர். அங்கே மனித எலும்புக்கூடுகளின் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் அறிக்கை இன்னும் இரு வாரங்களில் எமக்கு கிடைக்கும். எமதுஅகழ்வுப்பணிகள்தொடரும். எனஅவர் மேலும்தெரிவித்தார். (க-56)

உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயத்தில் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டி

முல்லைத்தீவு.ஜன.31

முல்லைத்தீவு உடுப்புக்குளம்தமிழ்வித்தியாலயத்தில் 2019 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

நிகழ்வில்முதன்மைவிருந்தினராக வடமாகாணசபை முன்னாள்உறுப்பினர் து.ரவிகரன் கலந்துகொண்டார்.

உடுப்புக்குளம் தமிழ்வித்தியாலயத்தின் விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளை, வித்தியாலய முதல்வர் சி.சத்தியசீலன் தலைமையேற்று நடத்தினார்.

(க-246)

ஊழல் மிக்க நாடுகளின் பட்டியலில் இலங்கை 89 ஆவது இடத்திலுள்ளது

வோர்ச்டோக் ரான்பரன்சி இன்ரநஷனல் தெரிவிப்பு

கொழும்பு. ஜன. 31

பன்னாட்டுரீதியில் ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் இலங்கை 89 ஆவது இடத்தில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலை வோர்ச்டோக் ரான்பரன்சி இன்ரநஷனல் என்ற பன்னாட்டு தன்னார்வுநிறுவனம்வெளியிட்டுள்ளது. அரசு அலுவலகங்கள், பொது வணிக நிறுவனங்களில் நடைபெறும் ஊழலை அடிப்படையாகக் கொண்டு 180 நாடுகளைக் கணக்கில்கொண்டு இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது என்று அந்த நிறுவனம் தெரிவித்தது.

ஊழல் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில்சோமாலியா, தெற்குசூடான், சிரியா ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் கடந்த ஆண்டு 81 ஆவது இடத்திலிருந்த இந்தியா மூன்று இடங்கள் முன்னேறி 78 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் ஊழலுக்கு எதிரானதொடர்நடவடிக்கைகாரணமாக சீனா கடந்த ஆண்டைவிட 10 இடங்கள் பின்தங்கி 87 ஆவதுஇடத்தைபிடித்துள்ளது.

பாகிஸ்தான் 117 ஆவது இடத்திலும், இலங்கை 89 ஆவது இடத்திலும், வங்கதேசம் 149 ஆவது இடத்திலும், நேபாளம் 12 ஆவது இடத்திலும்உள்ளன. வியட்நாமுக்கு இதில் 117 ஆவது இடம் கிடைத்துள்ளது. கடும் கட்டுப்பாடுகள் நிறைந்த நாடான வடகொரியாவுக்கு இதில் 176 ஆவது இடம் கிடைத்துள்ளது.

ஊழல் குறைந்த நாடுகளின் பட்டியல்

ஊழல்மிகக்குறைந்தநாடுகளின்பட்டியலில் டென்மார்க் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் கடந்தஆண்டுமுதல்இருபதுஇடங்களுக்குள் இருந்த அமெரிக்கா 22 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதில்ஜப்பான்18 ஆவதுஇடமும், ஆஸ்திரேலியா12 ஆவதுஇடமும்பிடித்துள்ளன. ஊழல் இல்லாத நாடும் என்று குறிப்பிட முடியாத அளவுக்கு ஊழல் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது என்று அந்த நிறுவனம்தெரிவித்துள்ளது.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த 180 நாடுகளில் தொடர்ந்து 20 நாடுகள் ஊழலுக்கு எதிராக முன்னேற்றம் அடைந்து வருகின்றன. 16 நாடுகள் தொடர்ந்தும் ஊழலை நோக்கி முன்னேறி வருகின்றன என்றும் அந்த அமைப்புக்குறிப்பிட்டுள்ளது.

மீதமுள்ள நாடுகளில் ஊழல் சார்ந்தோ, ஊழல்ஒழிப்புசார்ந்தோஎந்தமாற்றமும் இல்லாமலும் இருக்கின்றன. ஊழல்காரணமாக ஜனநாயகம் முற்றிலுமாகப் பாதிக்கப்படுகிறது. ஊழல் நிறைந்த நபர்கள்அரசியல்போன்றவற்றில்ஈடுபடுவது பல நாடுகளில் சமீப ஆண்டுகளில் அதிகரித்துள்ளது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

'ஜனநாயகத்தின் அத்திவாரத்தை ஊழல் பலவீனமாக்குவதை நாங்கள் பலநாடுகளில் கண்டு வருகிறோம். இதனை ஜனநாயகமற்ற ஊழல்நிறைந்த அரசியல்வாதிகள் பயன்படுத்தி வருகின்றனர் என்று அந்தஅமைப்புமேலும்தெரிவித்துள்ளது. (க)

இரத்தினம்பண்ணைப் பாலத்தை சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஜன.31

உருத்திரபுரத்தையும் கனகபுரத்தையும் இணைக்கும் இரத்தினம்பண்ணைப் பாலத்தினூடாக மக்கள்பயணிக்கமுடியாதநிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

தற்போது பிரதேச சபைகளூடாக பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் காலப்பகுதியில்கூட, இந்தப் பாலத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளன.

பாதுகாப்பற்ற இந்தப்பாதையின் ஊடாக பாடசாலை மாணவர்கள் அன்றாடம் பயணம் செய்துவருகின்றனர். சம்மந்தபட்டவர்கள்இப் பாலத்தின் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (க-222)

தமிழ்க் கூட்டமைப்பு அரசோடு இணையாது

செல்வம் எம்.பி. திட்டவட்டம்

கொழும்பு, ஜன.31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் அரசுடன் கூட்டணி சேராது. நாம் எதிர்க்கட்சியாக இருந்தே எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி கூட்டு அரசு ஒன்றை அமைக்கும் நோக்கில் ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படும் நிலையில் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கின் முதன்மைக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதோ, அவர்களின் தனிப்பட்ட அரசியல் மோதல்களோ எமக்குத் தொடர்பற்ற விடயங்களாகும். தமிழ் மக்களின் உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே எமக்கு உள்ளது. தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நாடாளுமன்றச் சுயாதீனத்தைக் காப்பதற்குமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கியது. அவர்களின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் நாம் ஆதரவு தெரிவிக்கவில்லை.

கூட்டணி அமைப்பது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்படவில்லை. பேச்சு நடத்தும் எண்ணமும் எமக்கு இல்லை. ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதற்கான ஆணையை மக்கள் எமக்கு வழங்கவில்லை. எதிர்க்கட்சிக்கான ஆணையையே மக்கள் எமக்கு வழங்கியுள்ளனர். அந்த ஆணையை மீறி நாம் செயற்படப் போவதில்லை. அவசியமான தருணங்களில் தமிழர்களின் நலனைக் கருதி அரசுக்கு வெளியே இருந்து எமது ஆதரவைத் தெரிவிப்போம். வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் தொடர்பாக அரசு வழங்கிய வாக்குறுதிகள் முழுமையடையவில்லை. அவற்றை உரிய நேரத்தில் செய்து கொடுக்க வேண்டும். குறிப்பாக வீட்டுத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டும் - என்றார். (எ-61)

மீண்டும் கூட்டரசு அமைப்பது பற்றி ஐ.தே.க - சு.கவுடன் இரகசியப் பேச்சு

கொழும்பு, ஜன. 31

மீண்டும் கூட்டரசு அமைக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக ஈடுபட்டு வருகிறது என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்தி எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் தீர்மானம் ஒன்றை எட்டவும் முயற்சிப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2015 ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலின் பின்னர் முதன்மையான இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசு அமைத்து கடந்த வருட இறுதியில் அரசியல் குழப்பத்தால் பிரிந்தன. இந்தநிலையில் மீண்டும் தேசிய அரசு அமைக்கும் நடவடிக்கையில் ஐக்கிய தேசிய கட்சி ஈடுபட்டுள்ளது என்று கட்சியின் அரசியல் பிரிவுகளில் இருந்து அறிந்துகொள்ள முடிந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மட்ட உறுப்பினர்கள் சிலரின் மூலமாக இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சில தடவைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சுமார் பதினைந்து நாடாளுமன்ற உறுப்பினர்களையேனும் மீண்டும் இணைத்துக்கொண்டு கூட்டணி அரசு ஒன்றை அமைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இணைந்துகொண்டால் அவர்களுக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டியுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாம் வரிசை உறுப்பினர்களுக்கு இடையில் இது குறித்த கருத்து முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளனவென்று தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீனமாக செயற்படத் தீர்மானித்துள்ள அணியிடம் இது குறித்து வினவிய போது அவ்வாறான எந்தவொரு அழைப்பும் விடுக்கப்படவில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஏதேனும் யோசனைகள் முன்வைக்கப்பட்டால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் அது ஆராயப்படும் என்றும் தெரிவித்தனர்.

(த-31)

அதிகாரங்களைப் பகிர்வதாகவும் அவற்றை மீளப் பிடுங்காதவாறும் அரசமைப்பு வேண்டும்

கூட்டமைப்பின் சிறிநேசன் எம்.பி. வலியுறுத்து

செங்கலடி, ஜன. 31

மத்தியில் உள்ள அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் பகிர்ந்த அதிகாரங்களை மத்திய அரசு மீளவும் பறித்துக்கொள்ளாத வகையில் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 1987இல் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் 32ஆவது நினைவேந்தல், மகிழடித்தீவு சந்தியிலுள்ள நினைவுத்தூபிக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது மறைக்க முடியாத படுகொலையாக இருந்தாலும் கூட மறைக்கப்பட்ட ஒரு படுகொலையாக அரச இயந்திரங்கள் செயற்படுகின்றன. விசாரணைகள் நடத்தப்படுவதில்லை, நடத்தப்பட்டால் குற்றவாளிகள் சுற்றவாளிகளாக அறிவிக்கப்படுவது முண்டு. பெரும் மனித உரிமைகள் புரிந்தவர்களை, இந்த நாட்டின் இறைமையைக் காத்தவர்கள் என்ற வகையில் பூச்சியங்களை கதாநாயகர்களாக மாற்றுகின்ற சூத்திரமும் இந்த நாட்டுக்குண்டு.

இறைமை என்ற சொல்லால் நாட்டின் தேசிய இனத்தின் உரிமைகளைப் பறித்தெடுத்து தாங்கள் வெற்றி பெற்றவர்கள் என்று மார்தட்டிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய போராளிகளின் பலம் இருந்த காலத்தில் பேச்சு நடைபெற்ற போது நாங்கள் பலமான கூட்டாட்சியைப் பெற்றுக் கொண்டிருக்கலாம் என்ற கருத்து உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துத் தருவேன் என்று ஒப்பந்தம் செய்துகொண்ட சில தரகர்கள் எமது கட்சியை உடைத்து பேரினவாத கழுகுகளின் இரைகளாக்கிவிடுவோம் என்று செயற்படுகிறார்கள்.

ஒக்ரோபர் சூழ்ச்சியில் திடீரென ஒருவர் தலைமை அமைச்சராக வரும்போது அவருக்குப் பல அனுசரணைகள் செய்யப்பட்டன. அந்தக் காலத்தில் உண்மைகள் ஒழிக்கப்பட்டன.

தற்போது புதிய அரசமைப்பை எட்டிப்பிடிக்கின்ற செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன - என்றார்.

(த)

புதிய தேயிலைத் தொழிற்சாலை அம்பத்தலையில் திறந்துவைப்பு

கொழும்பு, ஜன. 31

முல்லேரியா அம்பத்தலையில் அமைக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் புதிய தேயிலைத் தொழிற்சாலை நேற்றுமுற்பகல் திறக்கப்பட்டது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன இதைத் திறந்து வைத்தார். இரண்டு பில்லியன் ரூபா முதலீட்டில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தத் தேயிலைத் தொழிற்சாலை கணனி மயப்படுத்தப்பட்ட நவீன களஞ்சியத் தொகுதிகளையும் நவீன அலுவலகக் கட்டடங்களையும் கொண்டுள்ளது. இயந்திரம் மூலமாக தேயிலை தயாரித்தல் மற்றும் பொதியிடல் உள்ளிட்ட நடவடிக்கைகள் நவீன தொழிநுட்பத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற திட்டமான இந்தத் திட்டம் முக்கியமாக தேயிலை ஏற்றுமதியை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தேயிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு உயர்மட்டத்திலான தேயிலைப் பொதியிடல் பணிகளை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றது. நினைவுப்பலகையைத் திரைநீக்கம் செய்து தொழிற்சாலையைத் திறந்து வைத்த மைத்திரி அதைப் பார்வையிட்டார். (த)

மிருகங்களை வேட்டையாடுமின் பொறி வைத்தவர் மின் தாக்கி இறந்தார்

கொழும்பு, ஜன. 31

மின் தாக்கியதில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு ஹூரகஸ்மங்ஹந்திய களுவல கொடை பாடசாலைக்கு அண்மையில் மிருக வேட்டைக்காக மின்சாரப்பொறி அமைப்பதற்காக மின்கம்பத்தினூடாக மின்சாரம் பெறமுற்பட்ட வேளையிலேயே மின் தாக்கத்துக்கு ஆளானார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மாலை 6.45 அளவில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். அதே இடத்தைச் சேர்ந்த 29 வயது டையவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக மின் பெறும்போது பல உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன என்று பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-71)

பிம்ஸ்டெக் நிரந்தர செயற்குழுவின் சிறப்புற்ற முதலாவது கூட்டத்தொடர்

கொழும்பு, ஜன. 31

வங்காள விரிகுடாவின் பல்துறை தொழிநுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பின் நிரந்தர செயற்குழுவின் முதலாவது கூட்டத்தொடர் கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது என்று அயலுறவு அமைச்சு தெரிவித்தது.

அனைத்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பிம்ஸ்டெக் செயலர் நாயகம் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கொழும்பில் இடம்பெற்றது.

இது குறித்து அந்த அமைச்சு விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

காத்மண்டுவில் நடைபெற்ற 4ஆவது பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டின் போது பிம்ஸ்டெக் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, பிம்ஸ்டெக் செயலகம், பிம்ஸ்டெக் நிலையங்கள் மற்றும் நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் நிதி சார்ந்த விடயங்களைக் கையாள்வதற்காக பிம்ஸ்டெக் நிரந்தர செயற்குழு நிறுவப்பட்டது. இந்தத் தாபனத்தின் தலைமைத்துவத்தை ஏற்றதன் பின்னர் இலங்கை நடத்திய முதலாவது பிம்ஸ்டெக் கூட்டத்தொடர் இதுவாகும்.

பிம்ஸ்டெக்கின் செயலர் நாயகம் எம். ஷஹிதுல் இஸ்லாம் தனது உரையின் போது, பிம்ஸ்டெக் சாசனம், பிம்ஸ்டெக் பொறிமுறைகளுக்கான நடைமுறையின் விதிகள், பிம்ஸ்டெக் அபிவிருத்தி நிதி, ஒத்துழைப்புக்கான விடயப் பரப்புக்கள் மற்றும் பிம்ஸ்டெக் செயலகத்தை வலுவூட்டுதல்போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்தறிவதற்காக, இந்தக் கூட்டத் தொடரின் முக்கியத்துவம் குறித்து அவர் குறிப்பிட்டார்.

செயலகத்தில் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, அனைத்து உறுப்பு நாடுகளும் ஒவ்வொரு பணிப்பாளரை நியமிப்பதற்கான தமது ஈடுபாட்டை வலியுறுத்தின. 2020ஆம் ஆண்டில் செயலகப் பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு இலங்கை தகைமை பெற்றுள்ளது. கூட்டத்தொடரின்போது, பிம்ஸ்டெக் கொள்கை சிந்தனைக் கூடங்களின் வலையமைப்புக்கான வரைவுக் குறிப்பு நியதிகள் இறுதியாகத் தீர்மானம் செய்யப்பட்டன.

தொழினுட்பத் துறையில் முதன்மையான நாடென்ற வகையில், இலங்கையில் பிம்ஸ்டெக் தொழினுட்ப பரிமாற்ற வசதியை முறையாக நிறுவுவதற்கான தனது தீர்மானத்தை இலங்கை மீண்டும் வலியுறுத்தியது என்று அயலுறவு அமைச்சு தெரிவித்தது. (த)

ஆசியா பீவியின் விடுதலை நீதியானது பாகிஸ்தான் நீதிமன்று திரும்பத் தீர்ப்பு

இஸ்லாமபாத். ஜன. 31

பாகிஸ்தானைச்சேர்ந்த கிறிஸ்தவப்பெண் ஆசியா பீவியை மத அவமதிப்புக் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்தது நீதியானதே என்று பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றம் தெரி வித்தது. அத்துடன் ஆசியா பீவீ மீது தொடுக்கப்பட்ட மேன் முறையீட்டுவழக்கையும்நிராகரித்தது. பாகிஸ்தானில்மத அவமதிப்பு வழக்கில் சாவுத் தண்டனை விதிக் கப்பட்ட ஆசியாபீவியைஉச்சநீதிமன்றம்அண்மையில்விடுதலை செய்தது. இந்தத்தீர்ப்பைஎதிர்த்துநாடுமுழுவதும்போராட் டம் நடந்தது. முஸ்லிம் மதப் பற்றாளர்கள் பலர், ஆசியா வுக்கு சாவுத் தண்டனை அளிக்க வேண்டும் என்று போராட் டம் நடந்தது இதனால் பாகிஸ்தானில் பெரும் பரபரப்பு ஏற் பட்டது. ஆசியா பீவியின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள தால், அவர்தலைமறைவாக இருக்கிறார். இந்தநிலையில் அவரது விடுதலையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மறு சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு தலைமை நீதிபதி ஆசிப் சயீத் கோசா தலைமையிலான 3 நீதிபதிகள்கொண்டஅமர்வுமுன்புவிசாரணைக்குவந்தது. அப்போதுமறுசீராய்வுமனுவைதலைமைநீதிபதிகோசா தள்ளுபடி செய்தார். மேலும் ஆசியா பீவியை விடுதலை செய்ததுசரியேஎன்று, உச்சநீதிமன்றம்வழங்கியதீர்ப்பை உறுதி செய்தார்.

பின்னணி

பாகிஸ்தானில் லாகூர் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்தவர் ஆசியா பீபி. அந்த நாட்டின் சிறுபான்மையினத்தவரான கிறிஸ்தவமதத்தைச்சேர்ந்தவர். தனதுஅயல்வீட்டாருடன் ஏற்பட்டமுரண்பாட்டின்போது முகம்மது நபியைத் தரக்கு றைவாகப் பேசியதாக மத அவமதிப்பு வழக்கை எதிர் கொண்டார். இதில் அவருக்குச்சாவுத்தண்டனை விதித்து 2010ஆம்ஆண்டுஅந்தநாட்டின்நீதிமன்றம்தீர்ப்பளித்தது. சிறையில் அடைக்கப்பட்ட ஆசியா பீபி, தனது சாவுத் தண் டனையை நீக்கம் செய்யுமாறு பாகிஸ்தான் உயர் நீதிமன் றில் மேல்மூறையீடு செய்தார். உயர் நீதி மன்றம் ஆசியா பீபிக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை நீக்கியது.

வெனிசுவேலாவில் பதற்றம்

- படைத்துருப்புகள் தயார் நிலையில்
- எதிர்க்கட்சித் தலைவருக்குப் பயணத்தடை
- எரிபொருள் கப்பல்கள் துறைமுகத்தில் முடக்கம்

ஹரகஸ். ஜன. 31

தன்னைத் தானே வெனிசுவேலாவின் தற்காலிக அதிபராக அறிவித்துக்கொண்ட அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் குவான் குவைடோவின் சொத்துக்கள், வங்கிக் கணக்குகளை முடக்கியதுடன், அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையும் விதித்தது அந்த நாட்டு உச்ச நீதிமன்றம்.



வெனிசுவேலாவின் தற்போதைய அதிபரானநிக்கோலஸ்மதுரோவின் தேர்தல் வெற்றியை ஏற்க மறுத்த எதிர்க்கட்சித் தலைவரும், தேசிய சட்டமன்றத்தின் தலைவருமான குவான்குவைடோ, தன்னை அந்த நாட்டின் தற்காலிகத் தலைவராக அறிவித்துக்கொண்டார். அரசுக்கு எதிரான போராட்டத்துக்கும் அவர் அழைப்புவிடுத்தார். அவரைவெனி சுவேலாவின் தற்காலிக அதிபராக அமெரிக்காவின் ஆதரித்தது. அத்தோடு அமெரிக்காவில் அமைந்துள்ள வெனிசு வேலாவின் எண்ணை நிறுவனத்துக்கு ஏராளம் தடைகளை விதித்தது. அந்த நிறு வனத்தைத் தன் வசப்படுத்தப்போவதாக வும்அறிவித்துவருகிறது. இதனால், அமெ ரிக்காவுடன் தூதரக உறவுகளைத் துண் டித்துக்கொள்வதாக அதிபர் நிக்கோலஸ் மதுரோ அறிவித்தார். தங்கள் தூதர்களுக்கோ, குவான் குவைடோவுக்கோ அச்சுறுத்தல் ஏற்பட் டால் பதிலடி வழங்கப்படும் என்று அமெ ரிக்கா தெரிவித்தது. அமெரிக்காவுக்கு எண்ணையுடன் விரைந்த வெனிசுலா வின்கப்பல்கள்அமெரிக்கத்துறைமுகத்தில் எண்ணையை இறக்குமதி செய்ய முடி யாதநிலையில்நங்கூரமிட்டுள்ளன. இந்த நிலையில்தான் வெனிசுவேலாவின் உச் சநீதிமன்றம்குவைடோவெளிநாடுசெல்வ தற்குத் தடை விதித்துள்ளது. அத்துடன் அவரது வங்கிக் கணக்கை முடக்கவும் உத்தரவிட்டுள்ளது. வெனிசுவேலா இரா ணுவம், மதுரோ நிர்வாகத்துக்கு ஆதர வாக இருக்கும் நிலையில், படைத்து ருப்புகள் உசார் நிலையில் வைக்கப்பட் டுள்ளன.

நீதித்துறையும் குவைடோவுக்கு எதிரான நிலைப்பாட்டைஎடுத்திருப்பதுஉள்நாட்டில் மதுரோவின் பிடிஉறுதியாக இருப்பதைக் காட்டுகின்றதுஎன்று அரசியலவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இராணுவரீதியில்வெனிசுவேலாவில்பிற நாடுகள்தலையிடுவதைகனடாஉள்ளீட்ட 14 நாடுகளைக் கொண்டமைக்கப்பட்ட 'லிமாகுழு'என்றஅமைப்புஎதிர்ப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பின்னணி

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் வெனிசுவேலாவின் மறைந்த அதிபர் ஹியூகோ சாவேஸ். இவ ரது தலைமையில் வெனிசுவேலாவில் அமைந்தபுரட்சியைபொலிவரியன்புரட்சி என்று குறிப்பிடுவர். முதலாளித்துவத்தை யும்ஜக்கிய அமெரிக்கநாடுகளின்அயலுற வுக்கொள்கையையும்கடுமையாகஎதிர்த் தவர். போரற்ற உலகம், பசி, நோய், கல் லாமை அற்ற சமத்துவ ஜனநாயக சமூகத் துக்காகப்போராடியவர். அவரதுமறைவுக் குப் பிறகு அதிபரான நிக்கோலஸ் மதுரோ வின் ஆட்சியில் அரசியல் சர்ச்சைகள் அடிக்கடி தோன்றுகின்றன.

நிலையற்ற தன்மையும், ஜனநாயகச் சிக் கல்களும் அவ்வப்போது எழுகின்றன. அங்குஎழுகின்றஅரசியல்நெருக்கடிகளில் அமெரிக்காவின் தலையீடு இருந்து வருகி றது.

இரண்டாவது தடவையாகவும் வெனிசு வேலாஅதிபராகஅவர்பதவியேற்றுள்ளார். இந்தஅதிபர்தேர்தலைவெனிசுவேலாவின் எதிர்கட்சி புறக்கணித்துள்ளது.



ஆஸ்திரேலியாவின்நியூசவுத்வேல்ஸ்மாகா ணத்தில்உள்ளடார்லிங்நதியில்கோடிக்கணக் கில் மீன்கள் இறந்து மிதக்கின்றன. இதனால் அந்த நதி வெள்ளை நிறத்தில் காட்சியளிக்கி றது. இதற்போது ஆஸ்திரேலியாவில் நிலவும் கடும் வறட்சி காரணமாகவே அவை இறந் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



றொட்டிவிலை உயர்வை எதிர்க்கும் சூடான்மக்களின் போராட்டம் நீடிப்பு

சாவு 30 ஆக உயர்வு

கர்த்தூம். ஜன. 31

சூடானில் றொட்டி விலை உயர் வுக்கு எதிரான போராட்டம் நீடிக் கும் நிலையில், அதன்போதான வன்முறை மற்றும் பொலிஸ் நட வடிக்கைகளால் சாவடைந்தவர் களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது. சூடான் நாட்டில் றொட்டி உற்பத்திக்கான அரச கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்ட தால், றொட்டிவிலைகடுமையாக உயர்ந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியும் ஏற் பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பொதுமக்கள், சமூகஆர்வலர்கள் மற்றும்எதிர்க்கட்சியினர்போராட் டம்நடத்திவருகின்றனர். போராட் டக்காரர்கள்பல்வேறுபகுதிகளில் வீதிமறியலில்ஈடுபட்டுவருகின்ற னர். அத்துடன், கடைகளைக் கொள்ளையிட்டுப்பொருள்களை எடுத்துச்செல்வதும்அதிகரித்தது. போராட்டக்காரர்களை ஒடுக்குவ தற்குப்பொலிஸார்கடும்நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ள னர். கடந்த மாதம் இதன்போது பலர் சாவடைந்தனர். இந்த மாத மும்ஆங்காங்கேபோராட்டங்கள் நடந்தவண்ணம் உள்ளன. தற் போது சாவு எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது.

பின்னணி

மத்திய ஆபிரிக்க நாடான சூடா னில் பொருளாதாரம் மிக மந்த நிலைக்குச் சென்றுள்ளது. அங்குள்ள மக்களின் முதன்மை உணவான (அசீடா எனும் கோதுமை றொட்டி, கிச்ரா என் னும்சோளமாவுறொட்டி, குராசா என்னும் மைதா மாவு றொட்டி) றொட்டியின் விலை உயர்ந்தது. இதனால் அவர்கள் தொடர் போராட்டத்தில்ஈடுபடுகின்றனர்.

பாடசாலை அறியாதவருக்கு 'பத்மசிறி'

பாராட்டுகள் குவிகின்றன



மதுரை.ஜன.31

இந்திய அரசால் வழங்கப்படும் உயரிய 'பத்மசிறி' விருதைப் பெறுகிறார் மதுரையைச் சேர்ந்த சின்னப்பிள்ளை(வயது 67). சுய உதவிக் குழுக்களை அமைத்துக் கிராமங்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டவர் என்பதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

சமூகமுன்னேற்றத்துக்குஉதவும்பெண்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படும் 'ஸ்திரீசக்திபுரஸ்கார்'விருதுக்கு1999ஆம் ஆண்டு தெரிவாகிய இவர், அந்த விருது விழாவில்பங்கேற்றபோது,விருதுவழங்கிய அப்போதைய இந்தியத் தலைமை அமைச்சர் வாஜ்பாய் குனிந்து சின்னப் பிள்ளையின்காலைத்தொட்டுவணங்கினார். மறைந்த மு.கருணாநிதி முதல்வராக இருந்தபோது ஒரு லட்சம் ரூபாய் பொற்கிழி பரிசு தந்து இவரைப் பாராட்டினார், மறைந்த அப்துல் கலாம் அரச தலைவராக இருந்தபோது திடீரெனச் சின்னப்பிள்ளையின்வீட்டுக்குநேரடியாகச் சென்றதுடன், சின்னப் பிள்ளையின் பில்லுச்சேரி போல இந்திய கிராமங்கள் மாறவேண்டும்என்றுதாம்எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டு வியக்கவைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

விருதுக்கான காரணம்

வறுமைக் கோட்டுக்குக் கீழான சூழலில் பிறந்து, பிறந்தவுடன் தாயை இழந்து, சகோதரியால் வளர்க்கப்பட்டு, திருமணமாகி கணவர் பெருமாளுடன் மதுரை மாவட்டம் அழகர் கோவில் செல்லும் வழியில் பில்லுச்சேரி என்னும் குக்கிராமத்தில்வசித்துவருபவர்சின்னப் பிள்ளை.

வறுமையைப் போக்குவதற்காக, 1995 ஆம்ஆண்டில்தங்கள்கிராமத்தவர்களை இணைத்துச் சிறுசேமிப்புப் பழக்கத்தை உருவாக்கினார்.

பின்னர் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்தார். புல்லு களஞ்சியம், முனுசாமி களஞ்சியம்என8வரையானசேமிப்புக் களஞ்சியங்களைஆரம்பித்தார். காலப் போக்கில் களஞ்சியங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்க, நிர்வாக வசதிக்காக, 20 பெண்களுடன் ஒவ்வொரு களஞ்சியமும் இயக்கப்பட்டது.

1998ஆம் ஆண்டில் வைகை வட்டார களஞ்சியம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 14 மாநிலங்களில் களஞ்சியங்களை நிறுவியுள்ளார்.

ஈரானில் பொதுவெளியில் தூக்கு

தெஹ்ரான்.ஜன.31

ஈரானில் தன்பாலின ஈர்ப்பாளர் ஒருவருக்குப் பொதுவெளியில் சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஈரான் ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. ஈரானின் கசரும்நகரில்அடையாளம்மறைக்கப்பட்ட31வயதுமதிக்கத்தக்கநபர்ஒருவர்தன்பாலின ஈர்ப்பாளர் என்ற காரணத்துக்காக ஈரானின் சட்டவிதிகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஜனவரி 10ஆம் தேதி அவர் பொதுவெளியில் தூக்கில் இடப்பட்டார்.

அவர் மீது கடத்தல் சம்பவக் குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் செய்தி வெளியிட்டுள்ளன. ஈரானைப் பொறுத்தவரை அங்கு தன்பாலின உறவு குற்றமாகக் கருதப்படுகிறது. இந்தத் தூக்குத் தண்டனையை எதிர்த்துச் சமூக ஆர்வலர்கள் பலரும் கருத்துரைத்துள்ளனர்.

விமானியின் மன அழுத்தமே விபத்து ஏற்படக் காரணம்

நேபாள வானூர்தி விபத்துக் குறித்துத் தகவல்

காத்மண்டு.ஜன.31

கடந்த மார்ச் மாதம் 71 பயணிகளுடன் நேபாள அரசின் பயணிகள் வானூர்தி ஒன்றுபங்களாதேஷில்உள்ளடாக்காவில் இருந்து புறப்பட்டு நேபாளத்தின் காத்மாண்டுவை சென்றடைந்தவுடன் தீப் பற்றி விபத்துக்குள்ளானது. அந்த விபத்தில் 51 பேர் சாவடைந்திருந்தனர்.

வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அலுவலகத்துடனான மோசமான தொடர்பே இந்த விபத்துக்குக் காரணம் என்று முன்னதாகக் கூறப்பட்டது.

விபத்துக்குள்ளாகி யிருந்த வானூர்தியைச் செலுத்திச் சென்ற விமானி மனதளவில்பாதிக்கப்பட்டிருந்தார், அதுவே அந்த வானூர்தி விபத்துக் குள்ளானமைக்குத் காரணம் என்று தற்போது தெரிவிக்கப்படுகிறது.

விமானிமனஅழுத்தத்தால்பாதிக்கப்பட்டிருந்தார் எனவும், விமானக் குழுவினருடன் கோபமாகப் பேசியதாகவும், அவர் புகைப்பிடித்ததாகவும்விசாரணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

52வயதுடையஅந்தவிமானி,1993ஆம் ஆண்டு,மனஅழுத்தப்பாதிப்பால்பங்களாதேஷின் வானூர்திச் சேவையிலிருந்து நீக்கப்பட்டார்.

ஆனால் பின் அவர் உள்ளூர் வானூர்தி செலுத்துவதற்குத் தகுதியானவர் என மீண்டும்பணியில்சேர்த்துக்கொள்ளப்பட்டார். அவரின்பிற்பட்டமருத்துவஅறிக்கைகள் எந்தவித மன அழுத்த அறிகுறிகளையும் தெரிவிக்கவில்லை. ஆனாலும் குறித்தவானூர்திபுறப்படுவதற்குமுன்னதாகடாக்காவில்உள்ளகட்டுப்பாட்டுஅறையிடம் பேசிய விமானியின் குரல், கோபத்துடன் தெரிந்ததாகவும், அது அவர் அதிகபட்சமன அழுத்தத்தில் இருந்ததைக் காட்டுவதாகவும் விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

'ஹுவாவி' மீது குற்றங்கள் அமெ. நீதித்துறை அறிவிப்பு

சீனா மீதான அமெரிக்காவின் பாய்ச்சல் என்று வர்ணிப்பு

வோஷிங்டன்.ஜன.31

சீனாவின் தொலைத் தொடர்பு நிறுவனங்களில் ஒன்றும், உலகின் இரண்டாவது பெரிய அலைபேசிகள்தயாரிப்புநிறுவனமுமான 'ஹுவாவி' மீதும், அதன் முதன்மை நிதி அலுவலர் மங் வான்ஜோ மீதும் ஏராளமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது அமெரிக்காவின் நீதித்துறை. அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டுகளைச் சீனாவுடன் நிலவி வந்த வர்த்தகப் போரின் ஒரு வடிவம் என்றும் சீனா மீதான பாய்ச்சல் என்றும் அரசியலவதானிகள் வர்ணிக்கின்றனர். 'ஹுவாவி' மீதான குற்றச்சாட்டுகளில் வங்கி முறைகேடு, நீதியைத் தடுப்பது, தொழிநுட்பத் திருட்டு ஆகியவை அடங்குகின்றன.

அமெரிக்கா கேட்டுக்கொண்டதால், கடந்தமாதம்'ஹுவாவி'யின் முதன்மை நிதி அலுவலர் மங் வான்ஜோவைக் கைது செய்தது கனடா. தற்போது 'ஹுவாவி' மீது 23 குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளதாகஅமெரிக்காகூறுகிறது. "பல ஆண்டுகளாகச், சீன நிறுவனங்கள் எங்கள் ஏற்றுமதிச் சட்டங்களை உடைத்ததுடன், எங்கள் தடைகளையும் மீறி அமெரிக்க நிதியமைப்பைப் பயன்படுத்தி தங்கள் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். இது அதற்கு முடிவாக இருக்கும்" என்று கூறியுள்ளார் அமெரிக்காவின் வணிகத்துறைச் செயலர்வில்பர்ரோஸ். வேறுபல நிறுவனங்களுடன் உள்ள தமதுதொடர்புகள்பற்றிஅமெரிக்காவுக்கும், உலகவங்கிக்கும் தவறான தகவல்களை வழங்கிஈரானோடுவியாபாரம் செய்துள்ளது 'ஹுவாவி' என்பது அந்த நிறுவனத்தின் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்களில்ஒன்று. (2015ஆம் ஆண்டு அமெரிக்கா உள்

ளிட்டசிலநாடுகள்ஈரானுடன் அணு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டன. அந்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறிய அமெரிக்கா ஈரான்மீதுதடைகளைவிதித்தது பிறிதொரு கைபேசி நிறுவனத்தின் தொழில்நுட்பத்தைத் திருடியதாகவும் ஹுவாவி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எல்லாமாக23 குற்றச்சாட்டுகள் 'ஹுவாவி' மீது சுமத்தப்பட்டுள்ளன.

பின்னணி

உலகின் மிகப்பெரிய தொலைத் தொடர்புக் கருவிகள்உற்பத்திமற்றும்சேவை வழங்கும்'ஹுவாவி', அமெரிக்காவின் 'அப்பிள்' நிறுவனத்தை முந்திச் சென்று 'சம்சுங்'குக்கு அடுத்த படியாக இரண்டாவது பெரிய அலைபேசித்தயாரிப்புநிறுவனமாக உள்ளது. இந்த நிலையில், 'ஹுவாவி' நிறுவனரின் மகளான மெங் கடந்த டிசெம்பர் மாதம் அமெரிக்காவின் வேண்டுகோளின்படிகனடாவால் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனாலும் 24 மணி நேரமும்கண்காணிக்கப்படுகிறார். அவரைக் கண்காணிப்பதற்கு வசதியாகஅவர்தனதுகாலில் கட்டிக்கொள்ள வேண்டும் என்ற பணிப்பில் அமெரிக்காவால் 'மின்மடல்' ஒன்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த விவகாரத்தில் சீனா எதிர் கனடா, அமெரிக்கா எனும் விரோதப்போக்குநீடித்துவருகிறது.

விபத்துக்குள்ளான வானூர்தி சிதறுண்ட நிலையில்...

பாடசாலை நிகழ்வுகள்

தேசிய போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்

வவுனியா,ஜன.31

வவுனியா நகரசபையில் தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் நகரசபையின் தலைவர் இ.கௌதமன் தலைமையில் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் நகரசபையின் உபதலைவர் சு.குமாரசாமி, உறுப்பினர்கள், நகரசபை செயலர், சமுதாயப் பொதுமக்கள் பொலிஸ்பிரிவுப் பொறுப்பதிகாரி அரவிந்த, நகரசபை அலுவலர், பொலிஸ்தினைக்கள அலுவலர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். வவுனியா உளநலமருத்துவப்பிரிவு மருத்துவ அதிகாரி சுதாகரன் பொலிஸ்தினைக்கள அலுவலர் எச்.எம்.றஷ்லான் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு போதைப்பொருள் பாவனையை குறைப்பது மற்றும் தடுப்பதன் அவசியம் குறித்து வெளிப்படுத்துகை மூலம் விளக்கமளித்தனர். (க-110)

இரணைப்பாலை றோ.கவில் போதை ஒழிப்பு செயற்றிட்டம்

முல்லைத்தீவு, ஜன.31

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் அண்மையில் போதைப்பொருள் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. போதைக்கு எதிரான நாடு என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இந்தச்செயற்றிட்டம் அண்மையில் நடத்தப்பட்டது. பாடசாலை அதிபர் இ.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் போதை ஒழிப்பு தொடர்பான கருத்துக்களும் வழங்கப்பட்டன. (எ-ரி3)





போதைப் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு வார இறுதி நாள் நிகழ்வு

வவுனியா,ஜன.31

போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு வாரத்தின் இறுதி நாள்நிகழ்வுவவுனியாபண்டாரிகுளம் விபுலானந்தா கல்லூரியில் அதன் அதிபர் பொ.சிவநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்லூரி அதிபர் பொ.சிவநாதன், ஆசிரியர் ம.பிரதீபன், மாணவத் தலைவிசெல்வித.தர்சிகாமற்றும்ஊடகவியலாளர்பி.மாணிக்கவாசகம்ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

போதைப் பொருள் பாவனைக்கு எதிரானசுலோகஅட்டைகளையும்மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

இங்கு மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் தெரிவித்ததாவது:

இலங்கையில்இரண்டுபிரச்சினைகள் தேசியஅளவில்முக்கியத்துவம்பெற்றிருக்கின்றன.

விவசாயத்துறையில் சோளச் செய்கையை மிகமோசமாகத் தாக்கியுள்ள சேனாபடைப்புழு பிரச்சினை அதில் ஒன்று. மற்றுமொருபிரச்சினையாகிய போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காகஅரச தலைவர் போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தைப் பிரகடனப்படுத்திவிழிப்புணர்வை ஏற்படுத்தவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளமை.

சில வருடங்களுக்கு முன்னர் 2015 ஆம்ஆண்டில்போதைப்பொருள்பாவனையற்ற நாடாக இலங்கையை மாற்றிஅமைப்பதற்கானமுயற்சிகளை அரசு மேற்கொண்டிருந்தது. ஆனால் அந்தமுயற்சிவெற்றியளிக்கவில்லை. 2015ஆம்ஆண்டுகடந்து,நான்குவருடங்களாகிவிட்டன. இந்த 2019 ஆம் ஆண்டு போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தவதற்காக பரவலானவிழிப்புணர்வைஏற்படுத்துவதற்காக அரசு போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தைப்பிரகடனப்படுத்திச்செயற்படுத்தியுள்ளது. 21ஆம் திகதி ஆரம்பமாகிய போதைப்பொருள் பாவனைக்கு எதிரானவாரம் இறுதிநாளைஎட்டியுள்ளது.

போதைப் பொருள் பாவனையினால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் மக்கள்பாதிப்புக்குஉள்ளாகின்றார்கள். கல்லீரலை மோசமாகத் தாக்குகின்ற போதைப் பொருள்களினால் இரத்த வாந்தி, இரத்த கழிச்சல், குருதிச்சுற்றோட்டப்பாதிப்பு, இதயப் பாதிப்பு என்பனஏற்படுகின்றன.

போதைப் பொருள் பாவனையையும் போதைப்பொருள் கடத்தலையும் கட்டுப்படுத்துவதற்கு ,தனிமனிதனில் மாற்றங்கள் நிகழ வேண்டும். தனிமனிதர்கள் போதைப் பொருள் பாவனையைமுற்றாகநிறுத்துவார்களேயானால், போதைப் பொருள்களைக் கடத்திவர வேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது. போதைப்பொருள்பாவனையும்கட்டுப்படுத்தப்படும். கடத்தல்நடவடிக்கைகளும்முடிவுக்கு வரும்.

எனவே, மாணவர்கள் போதைப் பொருள் பாவனையின் பாதிப்புகளை அறிந்துதெளிந்துஅவற்றுக்கு அடிமையாகாமல் விலகியிருத்தல் அவசியம். அதன் ஊடாக நாளைய சந்ததியினராகியமாணவர்கள்சிறந்தவர்களாகவும் நல்ல குடிமக்களாகவும் உருவாக வேண்டும் - என்றார். (க-110)



போதைப் பொருள் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் அண்மையில்உடுப்பிட்டிஅமெரிக்கமிசன் கல்லூரி மாணவர்களால்முன்னெடுக்கப்பட்டது. உடுப்பிட்டிச்சந்தியில்இருந்து கல்லூரி வரையும் ஊர்வலம் நடைபெற்றது. விழிப்புணர்வுத்தெருக்கூத்தும்நடத்தப்பட்டது. (எ-422)

போதையை ஒழிப்போம் புதுயுகம் படைப்போம்

வவுனியா,ஜன.31

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் போதை ஒழிப்பு வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள்பாடசாலைஅதிபர் ரி.அமிர்தலிங்கம்தலைமையில்அண்மையில்நடைபெற்றன.பாடசாலைவாயிலிலிருந்துஆரம்பமாகிய மாணவர்பேரணிகண்டிவீதியூடாகபழைய பேருந்து நிலையம், மருத்தவமனை சுற்றுவட்டப்பகுதி வரை சென்று ஹொறவப்பொத்தான வீதியூடாக பஜார் வீதி, மணிக்கூட்டுக் கோபுரகண்டிவீதிவழியாகமீண்டும்பாடசாலையை சென்றடைந்துள்ளது. (க-111)

தென்மராட்சி கல்வி வலயத்தில் போதை ஒழிப்புச் செயற்றிட்டம்

சாவகச்சேரி, ஜன.31

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் போதை ஒழிப்பு வாரச் செயற்றிட்டம் அண்மையில் தென்மராட்சி கல்வி வலயத்தில்நடத்தப்பட்டது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் அதில் கலந்துகொண்டனர்.

வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்வே.க.சந்திரகுமார்சிறப்பு உரையாற்றினார். வலயத்திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ல.லிங்கேஸ்வரன், கல்விமுகாமைத்துப்பிரதிக்கல்விப்பணிப்பாளர்அ.பிரேமதாஸ், நிர்வாக அலுவலர் திருமதி யோ.குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பங்குபற்றிய அனைவரும் போதைப் பொருள் எதிர்ப்பு சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். (எ-9,131)

மன்னார்பெரியமடுமகாவித்தியின் போதை ஒழிப்பு வார இறுதி நாள்

மன்னார்,ஜன.31

தேசியரீதியில்அரசதலைவரால்ஆரம்பிக்கப்பட்ட போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதைப் பொருள் தடுப்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பங்கு தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மன்னார் பெரியமடு மகாவித்தியாலயதின் அதிபர் குலதீபன் தலைமையில் இடம் பெற்ற கருத்தமர்வில், பாடசாலை ரீதியில் மாணவர்கள் எவ்வாறு போதை பொருள்கள் பாவனையில் இருந்து தங்களைபாதுகாத்துகொள்ளமுடியும்என்பதுதொடர்பாகவும்,போதைப்பொருள்பாவனைதொடர்பான குற்ற செயல் ஒன்றினால் பாதிக்கப்படும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் பொது அமைப்புக்களின் அதிகாரி மற்றும்ஊடகவியலாளர்களினால்கருத்துரைகள் வழங்கப்பட்டன. (க-56)

நாவினால் சுட்ட வடு!

ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும்.
கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம் பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப் படுவான்.
நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக் காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை.
அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனி

டம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார். ஒவ்வொரு முறை ஆத்திரப் படும் போதும் சம்பந்தப் பட்டவர்களைத் திட்டு வதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மர வேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும் படி அறிவுரைத் தார்.
முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாட் கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப் படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!
நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறை வது குறையத் தொடங்கியது. சில நாள்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.
அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச் சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது.
எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க் கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.
மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.

சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

- மகத்தான காரியங்களுக்கு மகத்தான நம்பிக்கை களே பிறப்பிடம்.
- பிறருக்கு நன்மை புரிவதே புண்ணியம். பிறருக்கு தீமை புரிவதே பாவம்.
- நீங்கள் பலவீனமானவர்கள் என்று எண்ணிக் கொண் டிருந்தால் நீங்கள் பலம் அற்றவர்களாகவே ஆகிவிடு வீர்கள். நீங்கள் பலம் பொருந்தியவர்கள் என்று எண் ணினால் பலமுடையவர்களாக நீங்கள் ஆகிவிடு வீர்கள்.
- லட்சியத்தில் எத்தனை கவனம் செலுத்துகின்றீர்களோ அதே அளவு கவனத்தை லட்சியத்தை அடையும் வழி யிலும் செலுத்துங்கள்.
- பலவீனத்துக்கு மாற்று என்ன! பலவீனத்தைப் பற் றியே சிந்தித்துக் கொண்டிருப்பது அல்ல! பலத்தைப் பற்றி சிந்திப்பதே!
- தன் காலில் நிற்க ஒருவனுக்கு எது உதவுமோ அதுவே உண்மையான கல்வி.
- நீ எதனை எண்ணுகிறாயோ அதுவாகவே ஆகிவிடு கின்றாய். நீ சிந்தித்துத்தான் ஆகவேண்டுமென்றால் நல்ல எண்ணங்களை மகத்தான எண்ணங்களை எண்ணுவாயாக.
- ஒரே ஒரு ஆசிரியர்தான் உலகில் உண்டு. அனுபவம் தான் அது.
- யாரையும் அவருடைய குறைகளை வைத்து எடை போடக்கூடாது.

திருகோணமலை

★ இலங்கையின் 25 மாவட் டங்களில் ஒன்றாகும்.
★ இது கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது.
★ திருகோணமலை நகரம் இதன் தலைநகரமாகும்.
★ திருகோணமலை மாவட் டம் இலங்கைத் தீவின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ளது.
★ இந்த மாவட்டத்தின் வடக் கில் முல்லைத்தீவு மாவட்ட மும், மேற்கில் அனுராதபுர மாவட்டமும், தெற்கில் பொலநறுவை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களும், கிழக்கில் கடலும் உள்ளன.
★ புகழ் பெற்ற இயற்கைத் துறைமுகமாகிய திருகோண மலைத் துறைமுகம் இங்கே உள்ளது.
★ திருகோணமலை மாவட்டத்தின் பரப்பளவு 2ஆயிரத்து 727 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். இது நாட்டின் மொத்தப் பரப்பளவின் 4.16% ஆகும்.
★ இங்கு அமைந்துள்ள தொன்மையான சிவன் கோயி லான திருக்கோணேஸ்வரம் கோயிலும் இலங்கையி லும் வெளிநாடுகளிலுமுள்ள இந்து மக்கள் மத்தியில் பர வலாக அறியப்பட்டதாகும்.
★ இது கி.பி ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பாடல் பெற்ற தலமாகும். இது மட்டுமன்றி இலங்கையின் இன அரசியலிலும் திருக்கோணமலை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

நட்பு பொன்மொழிகள்

- நட்பு என்பது ஆரோக்கியம் போன் றது. அதை இழந்த பின்புதான் அதன் அரு மையை உணர்கிறோம்.
- புத்தகங்கள் நம்முடன் பேசும் மௌன நண்பர்கள்.
- எந்த ஒரு காயத்துக்கும் நண் பன் மருந்தாவான். ஆனால் நண்பன் ஏற்படுத்தும் காயத் துக்கு மருந்தே இல்லை.
- உன் நண்பனுக்காக எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடு. ஆனால் ஒருபோதும் நண்பனை மட்டும் விட்டுக் கொடுத்துவிடாதே
- வாழவைப்பவன் இறைவன் வாழத் தெரிந்தவன். மனிதன் விழ வைப்பவன் துரோகி தூக்கி விடுபவன் நண்பன்.
- உன்நண்பனைக்காட்டுஉன் னைப் பற்றி சொல்கிறேன்.
- பெருமைக்காரன் கடவுளை இழப்பான். கோபக்காரன் தன்னையே இழப்பான். பொறாமைக்காரன் நண் பனை இழப்பான்.
- புதியவர்களை நண்பர்களாக் கிக் கொள்ளுங்கள். பழைய நண்பர்களையும் தொடர்பில் வைத்திருங்கள். புதியவர்கள் வெள்ளி என்றால் பழையவர் கள் தங்கம்.
- நட்பு என்றும் தோல்வி அடை வதில்லை, தவறு செய்வது மில்லை.
- புத்தகங்களும் நண்பர்களும் குறைவாக இருந்தாலும் சிறந் ததாக இருக்க வேண்டும்.

இலங்கையின் தேசிய சின்னங்கள்

1. இலங்கையின் தேசிய மரம்
   நாகமரம்
2. இலங்கையின் தேசியப் பறவை
   காட்டுக்கோழி
3. இலங்கையின் தேசிய மிருகம்
   யானை
4. இலங்கையின் தேசிய மலர்
   நீலஅல்லி

பேச வழிகாட்டுகிறார் வள்ளுவர்

சொற்கள் மிக மிக வலிமையானவை. அவற்றை முறையாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் பெறாத வெற்றிகள் இல்லை. அவற்றை முட்டாள்தனமாகப் பயன்படுத்து பவர்கள் படாத கஷ்டங்கள் இல்லை. பேச் சையே மூதனமாக வைத்து நாட்டின் ஆட்சியையே பிடித்தவர்களை நாம் அறி வோம். சரியாகப் பேசத் தெரியாமல் இருப் பதெல்லாம் இழந்தவர்களையும் நாம் நம் தினசரி வாழ்க்கையில் பார்க்கிறோம்.
பேச்சுக் கலை பற்றி வள்ளுவர் பல இடங்க ளில் விளக்கி உள்ளார். பொதுவாக சில விடயங்களை அந்தந்த அதிகாரங்களிலேயே விளக்கும் அவர், பேச்சைப் பற்றி பரவலாகப் பல இடங்களில் சொல்கிறார்.

எப்படிப் பேச வேண்டும்?
மிகவும் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும்

சொல்லுக சொல்லில் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து (645)

(ஒரு சொல்லைச் சொல்லும் போது அதை விடச் சிறந்த பொருத்தமான சொல் இல்லாதவாறு தேர்ந்தெடுத்துச் சொல்ல வேண்டும்.) வள்ளுவர் சொல்வது போல் பேசும் முன் சொற்களைத் தெளிவாகத் தேர்ந்தெடுக்கப் பழ கிக் கொண் டால் பேச்சில் சொற்குற்றமோ, பொருள் குற்றமோ வர வாய்ப்பே இல்லை. நன்மை தரும் விடயங்களையே பேச வேண்டும். அதுவே தர்மம் என்கிறார் வள்ளுவர்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இல்லாத சொலல். (291)

(ஒருபோதும் சிறிதளவேனும் தீமை இல்லாத சொற்களைச் சொல்வதே வாய்மை எனப்படும்.) மேலும் தீமை இல்லாதபடி பேசுவது, அடுத்தவர் மன்தைப் புண்படுத்தாமல் இருப்பதால், அன்பும் நட்பும் கெட்டுவிடாமல் பாதுகாக்கிறது.
அவசியமானதை ரத்தினச் சுருக்கமாகப் பேச வேண்டும் என் கிறார் வள்ளுவர். பேசிக் கொண்டே போவதை அறிவுக் குறை பாடாகக் கருதுகிறார் அவர்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

தமிழ் தலைமைகளின் அரசியல் பலம்

தோட்டத்தொழிலாளர்களின்சம்பளத்தை1000ரூபாயாகஉயர்த்துவதற்கானபோராட்டம்வெற்றியளிக்கவில்லை. அடிப்படைச் சம்பளமாக நாளொன்றுக்கு 700 ரூபாயையும் மேலதிகமாக 50 ரூபாயையும் கொடுப்பதற்கானஇணக்கம்ஒன்றேஎட்டப்பட்டிருக்கிறது. ஊழியர்சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுடன் நாளாந்தக் கொடுப்பனவு தொழிலாளர் ஒருவருக்கு 855 ரூபாயாக இருக்கின்றது என்று கணக்குக் காட்டப்படுகின்றது.

தேயிலைத் தோட்ட நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தத்தில்கையெழுத்திட்ட தொழிற்சங்கங்கள், இந்தச்சம்பள அதிகரிப்பை வரவேற்கின்றன. ஆனால், மற்றைய தொழிற் சங்கங்களும் கட்சிகளும் அமைப்புகளும் அதனை எதிர்க்கின்றன.

மக்களின் போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்டுவிட்டது என்று 750 ரூபா சம்பளம் போதாது என்போர் தெரிவிக்கிறார்கள். போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்டதோ இல்லையோ, தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1000 ரூபா என்கிற நியாயமானசம்பளத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு தமிழ்அரசியல்தலைமைகள்தவறிவிட்டனஎன்பதுமட்டும் உண்மை.

சம்பள அதிகரிப்பைக் கோரி தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் அதற்கு ஆதரவான போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதனை ஒன்றிணைந்த, மக்கள் எழுச்சியாக மாற்றி கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய திடமானபோராட்டமாகக்கட்டியெழுப்புவதற்குத்தமிழ்த் தலைமைகள் தவறியதன் விளைவே தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்காமல் போனமையாகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாசம்பளம் வழங்கப்படவேண்டும் என்று எல்லாத் தமிழ்த் தலைவர்களும் ஆதரவு தெரிவித்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும்கூட ஆதரவு தெரிவித்திருந்தார்கள். கருத்துத் தெரிவித்ததுடன் எல்லோரும் தமது பணியை முடித்துக்கொண்டார்கள், ஒதுங்கிக் கொண்டார்கள்.

தோட்டத்தொழிலாளர்களில்பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள் என்கிற உணர்வில் நாடு முழுவதும் தமிழர்களிடம்பரவியிருந்தஆதரவுஅலையைஒன்றுதிரட்டிஅறுவடை செய்யக்கூடிய திறமையை தமிழ் அரசியல் தலைவர்கள் கொண்டிருக்கவில்லை என்பது கவலை தரும் விடயம்.

தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை என்பது வெறும் தோட்ட மக்களின் பிரச்சினை என்பதாக மட்டும் மட்டுப்படுத்திப் பார்க்கப்பட்டுவிடக்கூடாது. தமிழர்களின் உரிமைகளை இந்த நாட்டில் பெறுவதற்கான போராட்டங்களைத் தலைவர்கள் கையாளும் வினைத்திறனோடு பொருத்திப் பார்க்கவேண்டும்.

தமிழர்களின் தயவில்தான் இன்றைய ஆட்சி நடக்கிறது. இன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக ஆதரவை விலக்கிக் கொள்கிறோம் என்றால், ஆட்சி தொடர்வதற்கு வாய்ப்போயில்லை. ஆனாலும், தமது பலத்தைக் கொண்டுபேரம்பேசிதமதுமக்களுக்கு ஆயிரம்ரூபாசம்பள அதிகரிப்பைக்கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை என்பது குறித்து எங்கே போய் நொந்துகொள்வது.

மறுபக்கமாகப் பார்த்தால் தமது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி ஆயிரம்ரூபாசம்பளத்தைக்கூடத்தமதுமக்களுக்குப் பெற்றுத் தர முடியாத தமிழ்த் தலைமைகள் இனப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தந்துவிடுவார்கள் என்பதை எப்படி நம்ப முடியும்?

தமிழர்களின்உரிமைவிடயத்தில்ஒன்றிணைந்துசெயற்படவேண்டியதன்அவசியம்குறித்தும், தமதுஅரசியல்பலத்தை மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் பயன்படுத்துவதற்கானபொதுச்செயல்திட்டம்குறித்தும்தமிழ்த்தலைமைகள் ஆழமாகச்சிந்தித்துச்செயற்படவேண்டியகாலகட்டம்இது. விழித்துக்கொள்ளாவிட்டால் ஆயிரம் ரூபாசம்பளம் மட்டுமல்ல எதுவுமே கிடைக்காது.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்கள் விழிப்புடன் செயற்படுதல் வேண்டும்

இந்துமதி

தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கக்கூடிய புதிய அரசமைப்பின் உருவாக்கம் இலகுவான ஒன்றல்ல என்பது ஓரளவு தெளிவாகத் தெரிந்துவிட்டது. மகிந்த தரப்பினரும், பௌத்த மகா சங்கத்தினரும் இந்த முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவதற்கான சகல முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தெற்கிலுள்ள பொதுமக்கள் மத்தியிலும் இது தொடர்பான தவறான தகவல்கள் வேகமாகப் பரப்பப்பட்டு வருகின்றன. இவற்றைக் கண்டு அரசு மிரளவே செய்கின்றது. தேர்தல்கள் அடுத்தடுத்து இடம்பெறவுள்ளதால் மகிந்த மற்றும் ரணில் தரப்புக்கள் எச்சரிக்கையுடன் காரிய மாற்றுவதை அவதானிக்க முடிகின்றது.

கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதியை கருத்தில் கொள்ளுதல் வேண்டும் ரணில்

ஆனால் ரணில் தலைமையிலான அரசு சம்பந்தனுக்கு வழங்கிய உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டுள்ளது. அரச தலைவரால் அரசியல் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டபோது சம்பந்தன் ஆதரவுக் கரம் நீட்டியிருக்காதுவிட்டால் இந்த அரசு உயிர் பிழைத்திருக்கவே மாட்டாது. ரணில் இதை மனதில் வைத்துக்கொண்டுதான் புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக அடிக்கடி கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். ஆனால் இனவாதிகள் நிம்மதியாகச் செயற்படுவதற்கு அவரை அனுமதிப்பதாக தெரியவில்லை.

கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படாதெனவும் அவ்வாறு நிறைவேறினாலும் தமிழர்களுக்கு எந்தவித மான அதிகாரப் வழங்கக் கூடாதெனவும் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளன. தென்னிலங்கை மக்கள் மத்தியில் இந்தப் பரப்புரைகள் எடுபடுகின்றன என்றே தெரிகின்றது. இந்தநிலை நீடிக்குமானால் கூட்டமைப்பு பாதகமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். இதைச் சமாளிப்பதற்கான வியூகங்களைக் கூட்டமைப்பின் தலைமை உடனடியாகவே வகுத்துக்கொள்ள வேண்டும். புதிய அரசமைப்பின் உருவாக்கம் தோற்றுப்போகுமானால் அரசுக்கு இதுவரை வழங்கிய ஆதரவுக்காக கூட்டமைப்பு மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களைச் சந்திக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

அடுத்த தேர்தல்கள் இலகுவானவையல்ல

அதேவேளை அடுத்த ஆண்டு தேசிய அரசியலுக்குள் விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமாரும் நுழைந்துவிட்டால் அவர்களைக் கையாள்வது இலகுவானதாக இருக்காதென பிரதியமைச்சர் நளின் பண்டார கூறினார் என்று செய்தியொன்று வெளிவந்துள்ளது. சம்பந்தனையும் சுமந்திரனையும் இலகுவாக் கையாண்டதுபோன்று அவர்கள் விடயத்தில் நடந்துகொள்ள முடியாதெனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். ஒரு வகையில் கூட்டமைப்பின் பலவீனத்தையே இது சுட்டுகின்றது. ஆக, அடுத்தடுத்த தேர்தல்கள் தமக்கு இலக்குவானதாக இருக்காதுஎன்பதைகூட்டமைப்பினர்புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் தற்போது தலைதூக்க ஆரம்பித்து விட்டன. கொழும்பிலிருந்து சம்பந்தனால் கொண்டுவரப்பட்ட சி.வி. விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்குச் சவால்விடுகின்ற வகையில் செயற்பட ஆரம்பித்து விட்டார். விக்னேஸ்வரன் தம்மால் உருவாக்கப்பட்ட கட்சியைப் பலப்படுத்துவதில் தற்போது ஈடுபட்டுள்ளார். அவரிடம் செயற்றிறன் இல்லாதபோதிலும் அதிடியான கருத்துக்களை வெளியிட்டு மக்கள் மத்தியில் தமது மதிப்பை உயர்த்துவதே அவரது நோக்கமாகக் காணப்படுகின்றது. கஜேந்திரகுமார் அவருடன் இணைந்து செயற்படுவதற்கு வாய்ப்புப் பிரகாசமாகவே உள்ளது. ஏனென்றால் கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது கற்ற பாடத்தை அவர் மறந்திருக்க மாட்டார். விக்னேஸ்வரனுக்கும் அவரைவிட்டால் வேறு ஆள் கிடைக்கமாட்டார். அதைவிட விக்னேஸ்வரன் மாகாண அரசியலுக்குள் முடங்கிவிட கஜேந்திரகுமார் தேசிய அரசியலைக் கவனிப்பதும் இவர்களது நோக்கமாகவும் இருக்கலாம். அல்லது மாகாண அரசியல் வாய்ப்பாக அமையாதவிடத்து விக்னேஸ்வரனும் தேசிய அரசியக்குள் நுழைந்துவிடுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள் விக்னேஸ்வரனுடன் இணையலாம்!

கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள் சிலர் விக்னேஸ்வரனுடன் இணைந்து கொண்டமை தெரியவந்துள்ளது. மேலும் சிலர் இனிவரும் காலங்களிலும் இணைய வாய்ப்புள்ளது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பின் பலவீனம் தெளிவாகவே தெரிந்துவிட்டது. பெரும்பாலான உள்ளூராட்சித் சபைகளில் பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கு அதனால் முடியவில்லை.

தமக்கு வேண்டாதவர்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்கவேண்டிய நிர்ப்பந்தமும் அந்த அமைப்புக்கு ஏற்பட்டது. இது அதன் மதிப்புக்கும் இழுக்கைத் தரவல்லது. தேர்தல் வேளைகளில் மட்டுமே விழிப்படைந்து செயற்படுவதை விடுத்து இப்போதிருந்தே மக்களுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவது அவசியமாகும். மக்களின் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் தீர்வு வழங்குதலும் அவசியமானதாகும். அதுமட்டுமல்லாது எதிராளிகளின் குற்றச்சாட்டுக ளுக்கு மௌனம் காத்துக்கொண்டிராமல் உரிய பதிலை வழங்கவேண்டும். இளைஞர்களை இணைத்துக்கொள்வதில் அக்கறை காட்டவேண்டியதும் அவசியமானதாகும். கூட்டமைப்பின் தலைவர்கள் விழிப்புடன் செயற்படுவதையே அதன் தொண்டர்கள் எதிர்பார்க்கின்றனர்.

புதிய அரசமைப்பு ஊசலாடும் நிலை!

சேரலாதன்

பிளவுபடாத நாட்டினுள் தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும் என்பதைக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்து விட்டார். தம்மைச் சந்தித்த தெற்காசியப் பிரிவுக்குப் பொறுப்பான பிரிட்டனின் அதிகாரிகளிடமும் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் தமிழர்களுக்குத் தனிநாடு கிடைத்துவிடுமென இனவாதிகள் தெரிவித்துவரும் கருத்துக்களுக்குப் பதிலடி வழங்கும் வகையில் சம்பந்தனின் கருத்து அமைந்துள்ளது. அது மட்டுமல்லாது நாட்டின் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலமென ஒன்று இருக்காதெனவும் அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இனவாதிகளின் அரசியல் அரசமைப்புக்கு இடையூறு

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக இனவாத அரசியல் வாதிகள் வாயில் வந்ததையெல்லாம் உளறிக்கொட்டி வருகின்றனர். கடைந்தெடுத்த இனவாதியான விமல்வீரவன்ச ஒருபடி மேல்போய் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் வடக்கு கிழக்கில் மீண்டும் குருதி ஆறு ஓடுமென எச்சரித்துள்ளார். அவர் ஏன் இவ்வாறு கூறினாரென்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இதேவேளை புதிய அரசமைப்பு முழு நாட்டையும் நாசமாக்கிவிடுமென எதிர்க்கட்சித் தலைவரான மகிந்த ராஜபக்ச மீண்டும் நீலிக்கண்ணீர் வடித்துள்ளார். கொழும்பு அரசசைப் பலவீனப்படுத்தி மாகாண அரசுகளுக்கு அளவிடமுடியாத அதிகாரங்களை வழங்குவதே புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் முதன்மை நோக்கமெனவும் அவர் தெரிவித்திருக்கிறார். இதேவேளை கூட்டமைப்பு எதிர்க்கட்சிக்குரிய கடமைகளை உரிய வகையில் நிறை வேற்றியிருந்தால் புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான அவர்களது கோரிக்கைக்கு தெற்கில் ஆதரவு கிடைத்திருக்குமென மகிந்தவின் புதல்வரான நாமல் கூறியுள்ளார். அவரது கருத்தில் உள்நோக்கம் புதைந்து காணப்படுகின்றது.

எப்படிச் சமாளிப்பார் ரணில்?

புதிய அரசமைப்பின் உருவாக்கம் சவாலுக்கு உள்ளான நிலையில் காணப்படுவதால் ரணில் விக்கிரமசிங்க அதைச் சமாளித்து வெற்றிவாகை சூடுவாரா? என்பது கேள்விக்கு உரியதாகிவிட்டது. இதனால் கூட்டமைப்புக்கே பாதகம் ஏற்படப்போகின்றது. ஏனென்றால் புதிய அரசமைப்பு எவ்வாறாயினும் நிறைவேற்றப்பட்டுவிடுமென்ற நம்பிக்கையுடன் கூட்டமைப்பு அரசுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆதரவை வழங்கி வருகின்றது. அரசுக்கு ஆதரவை வழங்குவதற்கான முக்கிய காரணம் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்காகவே என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்.

இதனால், வெறும் கைகளுடன் மக்கள் முன்பாகச் செல்வதற்கு அவர்களால் முடியாது போய்விடும். அதுமட்டுமல்லாது கூட்டமைப்புக்கு எதிரானவர்களுக்கு இது வாய்ப்பாகவும் அமைந்துவிடும். இதனால் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கு சிரமப்பட வேண்டிய தொரு நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டுவிடும்.

அதேவேளை தென்னிலங்கை அரசியல்வாதிகள் இனவாதச் சிந்தனையிலிருந்து இன்னமும் விடுபடவில்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது. கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட மோசமான நிலையை அவர்கள் கவனத்தில் கொள்கின்றனரா என்று தெரியவில்லை. கொடிய போரால் நாட்டு மக்கள் எதிர்கொண்ட அவலநிலை தொடர்பாகவும் அவர்கள் சிந்திக்கிறார்களா என்றும் தெரியவில்லை. வெறுமனே தம்மைப் பற்றிய நினைவுகளுடன் மட்டுமே அவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இனவாதச் சிந்தனைகளையே தமது மூலதனமாகக் கொண்ட இவர்கள் அதை மக்களிடம் விதைத்து நாட்டைப் பேராபத்தில் தள்ளிவிடுவதில் முனைப்புடன் உள்ளமை வெளிப்படை.

புதிய அரசமைப்பு பாதகமானதல்ல

உண்மையைக் கூறப்போனால் புதிய அரசமைப்பில் நாட்டுக்குத் தீமை விளைவிக்கக்கூடிய எதுவுமே உள்ளடக்கப்படவில்லையென்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. இவ்வாறிருக்க சில அரசியல் வாதிகள் இதற்கு எதிராக ஏன் கிளர்ந்து எழுகின்றார்கள்? என்பதுபுரியவேயில்லை. தம்மைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு ரணில் மீண்டும் அந்தப் பதவியில் அமர்வதற்குக் கூட்டமைப்பு உதவியதை மகிந்த தரப்பு ஒருபோதுமே மன்னிக்கமாட்டாது. அதிலும் ரணிலும் சம்பந்தனும் இணைந்து புதிய அரசமைப்பை உருவாக்குவதையும் மகிந்த ஒருபோதுமே ஏற்றுக்கொள்ளமாட்டார். இந்த நாட்டின் அதிகாரம் மிக்கத் தலைவராக இருந்த அவர் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் முடங்கிக் கிடக்கின்றார். இதுவும் எவ்வளவு காலத்துக்கு என்பதும் தெரியவில்லை. அடிபட்ட வேங்கையின் நிலையில் அவர் உள்ளார்.

தனக்கு அடித்தவர்களைத் திருப்பித் தாக்குவதே அவரது முதன்மையான இலக்காகவுள்ளது. இதில் எவருக்குப் பாதிப்பு ஏற்பட்டாலும் அவர் கவலைப்படப்போவதில்லை. பதவி ஒன்றே அவரது குறியாகவுள்ளது. இதற்காக எதைச் செய்வதற்கும் அவர் தயாராகிவிட்டார். மறுபக்கத்தை எடுத்துக்கொண்டு வாழ்வா? சாவா? என்றநிலையிலேயே ரணில் உள்ளார். கூட்டமைப்பு அவருக்கான ஆதரவை விலக்கிக்கொண்டால் அவரது நிலை சீராகிவிடும். இதனால் கூட்டமைப்பின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டாய நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார். ஆனால் இது எளிதான காரியமாகத் தெரியவில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகளின் கைகளில் புதிய அரசமைப்பின் உருவாக்கம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இது கீழே வீசியெறியப்படுமா? அல்லது மேலே தூக்கி வைக்கப்படுமா? என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். வீசியெறியப்பட்டார் இந்தத் தீவின் நிலை கவலைக்கிடமே.

ஆசிரியருக்கான கடிதம்

பட்டாசுகளால் படும் அவஸ்தையை உணர்வீராக!

கடந்த கிறிஸ்மஸ் பண்டிகையோடு ஆரம்பித்த பட்டாசுச் சத்தங்கள் இன்னமும் முடிந்தபாடாக இல்லை. ஆங்கிலப் புதுவருடம், பொங்கல் என்று நீண்டுகொண்டே செல்கின்றன. இவை எப்போது முடிவுக்கு வரும் என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறது மனது. இந்தப் பட்டாசுகளால் ஏற்படும் அவஸ்தையை அதன் அவலத்தை அவற்றைக் கொழுத்துபவர்கள் கணக்கில் எடுப்பதில்லை போலும். மனித சமூகம் மட்டுமல்ல, மிருகங்கள் படும் துன்பம் சொல்லி மாளாதது. அதிலும் குறிப்பாக நாய்களின்பாடோ பெரும்பாடுதான்.

பட்டாசுகளின் சத்தத்தால் எத்தனையோ நாய்கள் தெருத் தெருவாக அலைந்து திரிகின்றன. சிலர் நாய்களை இலக்குவைத்தும் பட்டாசுகளைக் கொழுத்துகின்றனர். சிவனே என்று ஓர் ஓரத்தில் அவை உறங்கிக் கிடக்க பட்டாசுகளை வீசி அவற்றை வீதிக்கு இழுத்துவிட்டு, பின்னர் அவற்றால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கொடிபிடிப்பது எந்த வகையில் நியாயம்.

இவை ஒருபுறம் இருக்க பட்டாசுகளால் சூழலுக்கு ஏற்படும் தீங்கும் அளப்பெரியது. காற்றுமாசு உள்ளிட்ட ஏகப்பட்ட பிரச்சினைகளை இந்தப் பட்டாசுகள் ஏற்படுத்திவிட்டுவிடுகின்றன.

இந்தியத் தலைநகர் டெல்லியில் பட்டாசுகள் வெடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு சூழலை மாசுபடுத்துகிறது அது. எனவே எமது ஆறறிவு ஜாம்பவான்கள் இந்த விடயத்தைக் கருத்தில் எடுத்து பொறுப்புணர்ந்து செயற்படுதல் வேண்டும்.

பிரகாஸ்

வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

இரண்டாவது முறையாக விஷாலுடன் இணைகிறார் தமன்னா

அறிமுக இயக்குனர் வெங்கட் மோகன் இயக்கத்தில் அயோக்யா படத்தில் நடித்து வரும் விஷால் அடுத்து சுந்தர்.சி இயக்கத்தில் நடிக்க இருக்கிறார். இந்தப் படம் விஷால்சுந்தர்.சி இணையும் 3 ஆவது படம்.

இதில் விஷாலுக்கு ஜோடிகளாக தமன்னா, ஐஸ்வர்யா லட்சுமி இருவரும் நடிக்கிறார்கள். விஷாலுக்கு வில்லனாக ஜெகபதி பாபு நடிக்கிறார். கத்திச்சண்ட படத்துக்கு பிறகு விஷாலுடன் தமன்னா, ஜெகபதி பாபு இருவரும் இணைகிறார்கள்.

மேடம்: நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

இடபம்: எதிர்பாராத சிரமம் பற்றி மனம் வருந்த வேண்டாம். நியாயத்தை பின்பற்றுவதால் நன்மை உருவாகும். சீரான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.

மிதுனம்: சுற்றுப்புற சூழ்நிலையின் தாக்கம் தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற வாய்ப்பைப் பாதுகாப்பது நல்லது.

கடகம்: பெரியவர்களின் வழிகாட்டுதல்படி செயல்படுவீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்பு உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனையில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

சிங்கம்: உங்களின் நேர்மை எண்ணத்தை நண்பர்கள் பாராட்டுவர். தொழில், வியாபார நடைமுறையில் எதிர் பார்த்த வாய்ப்பு கைகூடும். ஆதாயம் அதிகரிக்கும்.

கன்னி: மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். திட்டமிட்ட செயலில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாக இருக்கும்.

துலாம்: பிறருக்கு உதவும் போது கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். லாபம் சுமார். திட்டமிட்டு செலவு செய்வது நல்லது.

விருச்சிகம்: திட்டமிட்ட பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணிகளுக்காக மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். இலாபம் சீராக இருக்கும்.

தனுசு: சமயோசிதமாக செயல்பட்டு மற்றவரிடம் பாராட்டு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

மகரம்: எதிர்பாராத சூழ்நிலையால் குழப்பம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

கும்பம்: இனம்புரியாத குழப்பம் ஏற்பட்டு மறையும். குடும்பத்தினரின் ஆலோனை வளர்ச்சிக்கு உதவும். தொழிலில் அதிக நேரம் பணிபுரிவீர்கள்.

மீனம்: பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள். உறவினர் வழியில் எதிர்பாராத நன்மை வந்து சேரும். தொழிலில் வளர்ச்சி பணி திருப்திகரமாக நிறைவேறும்.



எப்ப பாரு பேஸ்புக்கிலையே இருக்கியே உனக்கு வேலையே இல்லையா? ..

தம்பி புள்ளி விவரம் தெரியாம பேசக் கூடாது.
ஒருநாள் நீ வந்து பாரு.... தெரியும்.
ஒரே ஒரு நாள் பேஸ்புக் இல் நீ இருந்து பாரு அப்ப புரியும் எங்க வலி என்ன எண்டு....
எவ்வளவு போஸ்ட்
எவ்வளவு டென்ஷன்
எத்தனை லைக்
எத்தனை கமெண்ட்
எத்தனை ஷேர்
எத்தனை சண்டை
எத்தனை பஞ்சாயத்து
எத்தனை குரூப்
எத்தனை கெஞ்சல்கள்
எத்தனை கொஞ்சல்கள்
இதெல்லாம் அனுபவிச்சு
பாத்தாத்தான்யா தெரியும் ...

சரியாகப் பிறந்தநாள் வாழ்த்து சொல்லனும்...
திருமண நாள் வாழ்த்து சொல்லனும்...
பெண்கள் தினம் குழந்தைகள் தினம்
சிட்டுக்குருவி தினம் வரை வரும்
அதுக்கு எல்லாம் வாழ்த்து சொல்லனும்...

இது இல்லாம
புரபைல் பிக்சர் போட்டா "ஹாஹாஹா" எண்டு சிரிப்பு .....
இன்பாக்ஸ் தோழி கிட்ட
காலை வணக்கம்
மதிய வணக்கம்
இரவு வணக்கம்
மூஞ்சி சுமாரா இருந்தாலும்
வாய் கூசாம பொய் சொல்லனும்..

பெண்ணியம் பேசனும்
ஆணியம் பேசனும்....
எல்லா தோழிக்கும் அழைப்புக் கொடுக்கனும்..
கொடுத்து ஆறு மாசம் கழிச்சு தான் ஏற்பாங்க...
அதை தொலைநோக்கு பார்வையோட கையாள வேண்டும்.

மாமா, மச்சி, அக்கா, தங்கச்சி, அண்ணன், தங்கச்சி, தோழா, தோழின்னு உறவுமுறை வைத்து கமெண்ட் போடனும்....

இன்பாக்ஸ்ல ரொம்பவும் வழியவும் கூடாது, அதுக்காக இன்பாக்ஸ்ல பேசாம இருக்கவும் கூடாது....
முக்கியமா வாரம் ஒரு தடவை சண்டை போடனும் ....
எதையும் வந்து பார்த்தான் யா தெரியும் எங்க கஷ்டம் என்னன்னு ...

தீக்குள்ள விரல விட்டா சுடும் சொல்றேன் உனக்கு புரியல..?!!!!

2009 2019

அடப்பாவிகளா... இது மொபைல் கவர் டிசைனாம்...

அமெரிக்காவுக்கே சவால் விடுற மூளை...

இப்போ தான் ஜனவரி மாதம் வந்தது

அதுக்குள்ள எங்களை விட்டு ஓடிப் போயிடுச்சு

ஆர்வக்கோளாறு™ @motheen_farook

மறுக்கும் உரிமையை பறிக்காத உறவுக்கு ஆயுள் அதிகம் ..!!

தெனாவட்டு தமிழச்சி @MadhuBarathi

ஆங்கிலப் பள்ளியில் அடிவாங்கும் குழந்தை அழுகிறது அம்மா என்று...

விற்பனைக்கு

Town Acc வான் விற்பனைக்கு உண்டு.

52 - XXXX

தொடர்பு : 077 843 5356

(CS 22921) (14.17)

இலங்கை மின்சாரசபை
உத்துறு ஜனனி மின்னிலைய வளாகத்தினை சுத்திகரிப்புக்கான சேவை சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள்

இலங்கை மின்சாரசபை உத்துறு ஜனனி மின்னிலையத்திற்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவம் மற்றும் விலை மனு ஆவணங்களை 20.02.2019 பிற்பகல் 3.00 மணிவரை பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம், என்னும் முகவரியில் அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திர பெறுமதி (Price of the Bid Document) ரூபா.3,000.00

02. கேள்விப்பத்திர பிணை வைப்பு (Value of Bid Bond) ரூபா.42,000.00

கேள்விப்பத்திரங்கள் 21.02.2019 அன்று பி.ப 2.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம், என்னும் முகவரியில் மனுதாரர்களின் அல்லது மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம், என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது மேற்படி அலுவலக முகவரியில் உள்ள விலை மனுப் பெட்டியில் (Tender Box) இல் நேரடியாக இடலாம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
உத்துறு ஜனனி மின்னிலையம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம். 40075

உணவகம் வாடகைக்கு உண்டு

யாழ். தெல்லிப்பழையில் உள்ள உணவகம் ஒன்று அனைத்து தளபாட பொருள்களுடன் வாடகைக்கு உண்டு. -077 1019265

காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பாம்ஸ்கூல் அருகில் நான்கு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். -077 994 4439

மணமகள் தேவை

1987 புனர்பூசம் நட்சத்திரம், 35 கிரகபாவம் பொலிஸ் உத்தியோகத்தராக தொழில்புரியும் மணமகனுக்கு அரசாங்க உத்தியோகம் அல்லது தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் பெண் விரும்பத்தக்கது.

(CS 14536) (13.17)

077 447 5312

தவறிவிட்டது

யாழ். பிறவுண் வீதிக்கும் பண்ணை பஸ் நிலையத்திற்கும் இடையில் கணக்குப்புத்தகம், காசோலைகள் என்பன 28.01.2019 அன்று இரவுதவறியுள்ளது. இதனை கண்டெடுத்தவர்கள் அல்லது தகவல் தெரிந்தோர் பின்வரும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்புகொண்டு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லைக்குமரன் ரெக்ரைல்ஸ்
இல 405, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்

தொடர்பு: 075 239 9555
077 613 9019

கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் அங்கத்தவர்
ஸ்ரீ.பிரபாகரன்
(லக்சுமி வெதுப்பக உரிமையாளர்)
அவர்களின் அன்புத் தந்தை
கந்தையா ஸ்ரீகாந்தன்
அவர்கள் 29.01.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அங்கத்தவர்களும் பணியாளர்களும்
யாழ்மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.

(CS 1318) (14.17)

வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
ஆதனப் பெயர்மாற்றம்

41/10, பிரதான துணைவி வீதி, வட்டாரம் - 04

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 04 பிரதான துணைவி வீதியிலுள்ள இல : 41/10 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதி வேட்டின் பிரகாரம் **பொன்னம்பலம் பரமநாதன்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **சுப்பையா கதிர்காமத்தம்பி பெண் பாக்கியரத்தினம்** அவரது பேர்த்தியாரான காலஞ்சென்ற வள்ளியம் மையிடமிருந்து முதுசமாக வந்தது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இ.கோபாலசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 317/17.05.1982 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சுப்பையா கதிர்காமத் தம்பியும் பெண் பாக்கிய ரத்தினமும்** ஆகியவர்களிடமிருந்து **மருதப்பு செல்வராஜா** ஆகியவர் குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சுப்பையா காசிப்பிள்ளை ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.செல்வராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3727/30.10.1984 ஆம் இலக்க உறுதியால் குறித்த **மருதப்பு செல்வராஜா** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

